பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை 17.11.2020 கதிர் 12

### இனி இது ரகசியம் அல்ல!

'போட்டுக் கொடுத்து வாங்குவது' என்ற பேச்சுமொழி நம் மத்தியில் உண்டு.

கிரிக்கெட் விளையாடுபவர்களுக்கு இப்படிப் போட்டுக்கொடுத்து வீழ்த்துவது குறித்து நன்கு தெரியும். சுருள் பந்து வீச்சாளர்கள் பெரும்பாலும்

பக்கம் 02 »

## உறவுகளின் நினைவேந்தல் தொடர்பான

# இராணுவத் தளபதியின் மிரட்டலுக்கு அஞ்சாதீர்!

### தமிழ் மக்களுக்கு சுமந்திரன் செய்தி



கொழும்பு, நவம்பர் 17

'உயிரிழந்த உறவுகளுக்கு பொது வெளியில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்த இடமளிக்க முடியாது, அதை மீறி நடத்துவோர் மீது தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்' என்ற இராணுவத் தபளதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா விடுத்திருக்கும் மிரட்டலுக்குத் தமிழ் மக்கள் அஞ்சத் தேவையில்லை. அது சட்ட விரோதமான அச்சுறுத்தல்.

– இவ்வாறு தமிழ் மக்களுத் தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்தின்.

பக்கம் 02 »

## அரவிந்தகுமார் டயானாவுக்கு அரச பக்கம் இடம்

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் மற்றும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே ஆகியோருக்கு நாடாளுமன்றத்தில் ஆளுங்கட்சிப் பக்கத்தில் ஆசனங்களை ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவால் இதற்கான கோரிக்கை சபாநாயகரிடம் முன்வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது.

பக்கம் 02 »

## நேற்றும் 3 கொரோனா சாவுகள் இதுவரை 61 பேர் பரிதாப மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்பான மேலும் 3 மரணங்கள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்கனவே 58 கொரோனா மரணங்கள் பதிவான நிலையில், நேற்று அறிவிக்கப்பட்டுள்ள 3 மரணங்களுடன் இதுவரை 61 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**59ஆவது மரணம்**

மொறட்டுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த, 84 வயதான பெண் ஒருவர், அவரது வீட்டில் நேற்று மரணமடைந்துள்ளார். அவரது மரணத்துக்கான காரணம், நீரிழிவு நோயுடனான கொரோனாத் தொற்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

**60ஆவது மரணம்**

கொழும்பு – 10, மாளிகாவத்தையைச் சேர்ந்த, 70

பக்கம் 02 »

### மாமனிதர் சந்திரசேகரனின் புதல்வி

## அனுஷா தலைமையில் மலையகத்தில் வெகுவிரைவில் மலர்கிறது புதிய கட்சி



மலையகத்தில் விரைவில் புதியதொரு அரசியல் கட்சி உதயமாகவுள்ளது என நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் மாமனிதர் சந்திரசேகரனின் புதல்வி சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தலைமையிலேயே இக்கட்சி மலர்கின்றது எனவும்,

பக்கம் 02 »

## 14 ஆயிரத்தைக் கடந்தது 3ஆம் அலையின் பாதிப்பு

### நேற்றும் 387 பேருக்குத் தொற்று

கொழும்பு, நவ.17

இலங்கையில் நேற்றும் 387 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களில் இதுவரையில் 11 ஆயிரத்து 806 பேர் குணமடைந்துள்ளனர். 5 ஆயிரத்து 810 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரை 14 ஆயிரத்து 175 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## சி.ஐ.டி. விசாரணை வலைக்குள் சிக்கினார் எரான் விக்கிரமரத்ன

### நேற்று இரு மணி நேரம் தீவிர விசாரணை



முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான எரான் விக்கிரமரத்ன குற்றப் புலனாய்வு பிரிவின் விசாரணை வலைக்குள் சிக்கியுள்ளார்.

நேற்று தன் மீது இரு மணித்தியாலங்கள் தீவிர விசாரணை நடத்தப்பட்டுள்ளதை அவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

விசாரணைக்காக அவருக்குகே குற்றப் புலனாய்வு பிரிவு ஏற்கனவே

பக்கம் 02 »

## 2021 'பட்ஜட்'டை இன்று சமர்ப்பிக்கிறார் மஹிந்த

### டிசம்பர் 10 இறுதி வாக்கெடுப்பு

பிரதமரும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவினால் 2021ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு (வரவு – செலவுத்திட்ட உரை) முன்வைக்கப்படவிருப்பதால் நாடாளுமன்றம் இன்று பிற்பகல் 1.40 மணிக்கு கூடவுள்ளது என நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க அறிவித்துள்ளார்.

இதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவினால் வரவு – செலவுத்திட்டம் முன்வைக்கப்படும்.

பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதைத்தான் செய்வார்கள். பந்தை சற்று தூக்கி உயரமாக எத்தி வீசுவார்கள். துடுப்பாட்ட வீரர் கலைத்துக் கலைத்துத் தேடித் தேடிப் போய் அதை விளாசுவார். கடைசியில் ஆசை காட்டி மோசம் செய்வதாக, அடிக்கப்போய் விக்கெட்டை பறிகொடுப்பார் துடுப்பாட்ட வீரர். 'கச்' மூலமோ அல்லது எத்தி ஆசை காட்டி வீசப்பட்ட பந்தைத் தேடி அடிக்க முன்னேறி, குறி பிழைக்க ஸ்டம்பிலோ, விக்கெட்டிலோ அவர் ஆட்டம் முடியும்.

அப்படி ஒரு வேலை செய்த திருப்தி எனக்கு.

ஆசை காட்டி நான் மோசம் செய்தது வேறு யாருக்குமல்ல. சுமந்திரன் எம்.பிக்குத்தான்.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

விடுதலைப் புலிகளின் போராட்டம் இங்கு நடந்த காலத்தில் அரசியல் செய்தவரல்லர் சுமந்திரன். ஆயுதப்போராட்டத்தின் முடிவின் பின்னர் – ஒன்பது மாதங்கள் கழித்துத்தான் – அரசியல் களத்துக்குள் வந்தவர் அவர்.

தமிழர் தரப்பின் ஆயுதப் போராட்ட வழிமுறையை தாம் ஏற்றவர் அல்லர் என்ற தமது நிலைப்பாட்டை ஒளிவுமறைவின்றி எப்போதும் கூறுபவர் அவர்.

*'விடுதலைப் புலிகளின தியாகத்தை, போராட்டத்தை நான் மதிக்கிறேன். ஆனால் அந்த வழிமுறையை நான் அங்கீகரிக்கவில்லை.'* – என்பது அவரது நிலைப்பாடு. அதை வெளிப்படையாகவும் பேசுபவர்.

புலிகளுக்கு ஆதரவாளர்கள் என்று வெளியில் நடிப்புக்குக் கூறிக்கொண்டு, 2009 மேயில் புலிகள் நெருக்கடிக்குள் சிக்கியிருந்த போது, 'அண்ணன் எப்ப சுவான்' திண்ணை எப்போது காலியாகும்?' – என மகிழ்வோடு பார்த்திருந்த தலைவர்களை எனக்குத் தெரியும். இன்றும் வாக்கு சுவீகரிப்புக்காக புலி ஆதரவு வேசம் போடும் வேடதாரிகள் அவர்கள்.

அவர்களுடன் ஒப்பிடுகையில் சுமந்திரன் ஆயிரம் மடங்கு மேல் எனலாம்.

யுத்தத்தில் உயிரிழந்த புலிகள் உட்பட அனைத்து உறவுகளுக்குமாக நினைவேந்தல் செய்யும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்று விடாது குரல் எழுப்பி வருபவர் சுமந்திரன். கடந்த வாரமும் அவர் அதை நாடாளுமன்றத்தில் ஆணித்தரமாக வலியுறுத்தியிருந்தார்.

ஆனாலும் அவர் குறித்து எனக்கு ஒரு குறையுண்டு.

விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தைத் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறுவதாலோ என்னவோ, மாவீரர் தின நிகழ்வுகளில் அவரை நான் காண்பதில்லை. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலிலோ, திலீபன் நினைவேந்தலிலோ அதிகம் அவர் தென்படுவதில்லை.

புலிகளின் உயரிய தியாகத்தில் தாம் அரசியல் செய்யக் கூடாது என்ற எண்ணம் கூட அதற்குக் காரணமாக இருக்கலாம்.

நினைவேந்தல் உரிமைக்காக நீதிமன்றத்தில் வாதாடி சாதகமான தீர்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் அவர், புலிகளின் நினைவேந்தல்களை நாசூக்காகத் தவிர்த்துக் கொள்வார்.

இம்முறை திலீபன் நினைவு நிகழ்வில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் எல்லோரும் நெருக்கடிக்கு மத்தியிலும் ஆஜர். சுமந்திரன் மட்டும் மிஸ்ஸிங். அவர் அச்சமயம் கொழும்பில்.

ஆனால் இந்த முறை மாவீரர் தின நிகழ்வில் அவர் 'எஸ்கேப்' பண்ண முடியாது.

அந்த நிகழ்வு தொடர்பில் இராணுவத் தபளதியின் எச்சரிக்கைக்கு – அச்சுறுத்தலுக்கு – அஞ்சாதீர், அது சட்டவிரோதமான மிரட்டல் என்று சுமந்திரன் வாயாலேயே தமிழ் மக்களுக்கு ஒரு செய்தி கொடுக்கச் செய்துள்ளோம்.

அப்படி ஒரு செய்தியை மக்களுக்குக் கொடுத்து விட்டு அந்த மக்களின் பிரதிநிதி அந்நிகழ்வில் மக்களோடு மக்களாக நிற்காமல் தாம் மட்டும் ஒதுங்க முடியாதல்லவா? அப்படி ஒதுங்கினால் இராணுவத் தளபதியின் அச்சுறுத்தலுக்கு அவரே அஞ்சினார் என்றாகி விடும் அல்லவா? மக்களை அஞ்ச வேண்டாம் என்று கூறிவிட்டு அவர் ஒதுங்கவும் முடியாதல்லவா?

கடைசியில் போட்டுக் கொடுத்து, அந்த நிகழ்வில் பங்குபற்றும் கட்டாயம் என்ற சிக்கலில் அவரை மாட்டி விட்டோம் அல்லவா..?

எனக்கு இப்போது நல்ல திருப்தி...!

–மின்னல் –

## 2021 'பட்ஜட்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது இந்நாட்டின் 75ஆவது வரவு – செலவுத்திட்ட அறிக்கையாக அமையும்.

இன்று பிரதமரினால் வரவு – செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர் நாளை 18ஆம் திகதி முதல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை வரவு – செலவுத் திட்டம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நடைபெறும்.

இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு 21ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடத்தப்படும். நாளை 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நாடாளுமன்றம் முற்பகல் 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை நடத்தப்படும்.

இதன் பின்னர் வரவு – செலவுத் திட்ட குழுநிலை விவாதம் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதிவரை நடத்தப்படும். டிசம்பர் 10ஆம் திகதி மாலை 5 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும்.

வரவு – செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் இன்று முதல் வரவு – செலவுத்திட்ட விவாதம் நடத்தப்படும் முழுமையான காலப்பகுதியில் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய நாடாளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

இன்று வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் நிதி அமைச்சின் அனுமதியளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு மாத்திரம் நாடாளுமன்ற அமர்வுகளைப் பார்வையிட அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதுடன், வரவு – செலவுத்திட்டம் முன்வைக்கப்படும் காலப்பகுதியில் சபாநாயகரின் கலரியில் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய ஆசன ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும். பொதுமக்கள் கலரி மற்றும் ஊடகவியலாளர் கலரி என்பன தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும்.

வரவு – செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர் நிதி அமைச்சரினால் சம்பிரதாயபூர்வமாக ஏற்பாடு செய்யப்படும் தேனீர் விருந்துபசாரம் இவ்வருடம் இடம்பெறவிருக்கின்றபோதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் விசேட விருந்தினர்களுக்காக மாத்திரம் இது மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

கொரோனா வைரஸ் சவால் காரணமாக வரவு – செலவுத்திட்ட விவாதம் நடத்தப்படும் காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது விருந்தினர்களை நாடாளுமன்றத்துக்கு அழைத்துவர முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சி.ஐ.டி. விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அழைப்பு விடுத்திருந்தது.

அதற்கமைய நேற்றுப் பிற்பகல் 2 மணி யளவில் கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் அவர் ஆஜராகி இருந்தார்.

கொழும்பு – மாளிகாவத்தையில் வைத்து அண்மையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல் மன்னன் மாகந்துரே மதுஷ் மற்றும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி சஹ்ரான் ஹாசீமின் மனைவி ஆகியோர் குறித்து ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வெளியிட்ட கருத்துத் தொடர்பிலேயே தன் மீது விசாரணை நடத்தப்பட்டுள்ளது என எரான் விக்கிரமரத்ன எம்.பி. தெரிவித்துள்ளார்.

## அரவிந்தகுமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அத்துடன், அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்த எதிர்க்கட்சியின் ஏனைய ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சிப் பக்கத்திலேயே தனியாக ஆசனங்களை ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள உறுப்பினர்களுக்கு ஆளுங்கட்சிப் பக்கம் ஆசனங்களை ஒதுக்குமாறு, எதிரணி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இராணுவத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
"போரில் மரணித்த சாதாரண மக்களை நினைவு கூர்வதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அதனை வீட்டில் இருந்து செய்யலாம். ஆனால், பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்தி விட்டு உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் மாவீரர் தின நினைவேந்தலைப் பொது வெளியில் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது. அதை மீறி நடத்தினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.'

– இவ்வாறு நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

இந்த விடயம் குறித்து சுமந்திரன் எம்.பி. நேற்றிரவு 'காலைக்கதிர்' நாளிதழுக்குக் கருத்து வெளியிட்டார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

இந்த விடயம் தொடர்பில் நான் நாடாளுமன்றத்திலேயே கேள்வி எழுப்பினேன்.

தமது உறவுகளுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தவதில் கூட தமிழர்களுக்கு எதிராகப் பாகுபாடு – பாரபட்சம் – காட்டப்படுகின்றது.

ஜே.வி.பியின் தலைவர் றோஹண விஜேவீரவுக்கு அஞ்சலி செலுத்த சிங்கள மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் தமிழ் உறவுகள் அதனைச் செய்ய அனுமதிக்கின்றார்கள் இல்லை என்று நாடாளுமன்றில் சுட்டிக்காட்டினேன்.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளைக் காட்டி நினைவேந்தலைத் தடுக்க முனையும் கீழ்த்தரமான முயற்சியில் ஈடுபடாதீர்கள் என நாடாளுமன்ற உரையில் அரசுத் தரப்பை நான் கோரினேன்.

எனது உரைக்குப் பதில் கூற அரசுத் தரப்பில் எவரும் தயார் இல்லை.

ஆனால், இப்போது இராணுவத் தளபதி தமிழ் மக்களை அச்சுறுத்துகின்றார். அதுவும் சட்ட விரோதமான முறையில் மிரட்டுகின்றார்.

தமிழ் மக்கள் தங்கள் உறவுகளை நினைவுகூர முடியும். அதற்கு அவர்களுக்கு சட்ட ரீதியான உரிமை உண்டு. அதைத் தடுக்க முடியாது.

'கொவிட்' தொடர்பான விதிமுறைகளை மீறாமல், சுகாதார அமைச்சு விடுத்துள்ள ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி, சமூக இடைவெளியைப் பேணி, உரிய சுகாதாரப் பாதுகாப்போடு விடயங்களை முன்னெடுத்தால், தனிமைப்படுத்தல் சட்டம் மக்கள் மீது பாயமுடியாது.

தன்னிஷ்டப்படி யாரும் சுகாதார விதிமுறைகளை வியாக்கியானம் செய்ய முடியாது. அந்த விதிமுறைகளை மீறாத வரையில், யாரையும் தனிமைப்படுத்துவோம் என்று யாரும் எச்சரிக்கவோ, அச்சுறுத்தவோ முடியாது. அந்த அச்சுறுத்தலை இராணுவத் தளபதியும் விடுக்க முடியாது. அப்படி விடுத்தால் அது சட்ட விரோத அச்சுறுத்தல். சட்டத்தைத் தவறாகக் கையாளும் அத்துமீறல் நடவடிக்கை.

ஆகவே சுகாதார விதிமுறைப்படி – ஒழுங்கு ஏற்பாடுகளுக்கு அமைய – சமூக இடைவெளியைப் பின்பற்றி – பிற சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கைக்கொண்டபடி, நமது உறவுகளுக்கு நாம் அஞ்சலி செலுத்தலாம்.

சுகாதார விதிமுறைகளை தத்தமது அரசியல் தேவைகளுக்கேற்ப தவறாகப் பயன்படுத்த முயலும் சக்திகளை நாம் அடையாளம் கண்டு, ஆதாரத்துடன் நீதி மன்றங்களுக்கும் கொண்டு செல்ல முடியும். – என்றார் சுமந்திரன் எம்.பி.

## நேற்றும் 3 கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வயதான ஆண் ஒருவர், கொரோனாத் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டு ஐ.டி.எச். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று மரணமடைந்துள்ளார். அவரது மரணத்துக்கான காரணம், நாட்பட்ட சிறுநீரக நோய், பக்கவாதப் பாதிப்பு மற்றும் கொரோனாத் தொற்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

**61ஆவது மரணம்**

கொழும்பு – 13, கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த, 75 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று மரணமடைந்துள்ளார். அவரது மரணத்துக்கான காரணமாக, நீரிழிவு, இருதய நோய் மற்றும் கொரோனாத் தொற்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அனுஷா தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு ஓரிரு நாள்களில் வெளியிடப்படவுள்ளது எனவும் மேற்படி வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

புதிய கட்சிக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் யாவும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன எனவும், மலையகத்தில் அரசியல் மற்றும் சமூகமாற்றத்தை விரும்பும் இளைஞர்கள் சிலரும் இக்கட்சியில் இணையவுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன், புதிய கட்சியின்கீழ் இணைந்து செயற்படுவது தொடர்பில் மலையகத்திலுள்ள சில சிவில் அமைப்புகளும் தற்போது ஆலோசனை நடத்தி வருகின்றன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேரடி சந்திப்புகள் இடம்பெறாத போதிலும், நவீன் தொழில்நுட்பம் வாயிலான கலந்துரையாடல்கள்மூலம் இதற்கான நடவடிக்கைகள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மலையக மக்கள் முன்னணியின் பிரதி பொதுச்செயலாளராக செயற்பட்ட அனுா சந்திரசேகரன், நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் தனித்துக் களமிறங்கி 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிருந்தார்.

எனினும், அவரைக் கட்சியில் இருந்து இடைநிறுத்தும் முடிவை மலையக மக்கள் முன்னணி எடுத்தது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே புதிய கட்சியை அனுா ஆரம்பிக்கின்றார். அதேவேளை, மலையக மக்கள் முன்னணியை என்றாவது ஒருநாள் கைப்பற்றுவேன் என அனுா சூளுரைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



### பவவினை பறந்து போக பற்றுவோம் கந்தன் பாதம்!

ஆணவம் ஓங்கும் வேளை
அகமதில் இருளே சூழும்
அசுரராய் ஆகி வாழ்வில்
அறமதை அழிப்பார் நாளும்
அரனது மைந்தன் கந்தன்
நினைவதை அகத்திற் கொண்டால்
அசுரரும் அமரர் ஆவர்
ஆணவம் அழிந்தே போகும்!

வரமினை வேண்டு வார்க்கு
வழங்கியே நிற்பான் கந்தன்
கரமினைக் கூப்பி நின்றால்
கையினைக் கொடுப்பான் கந்தன்
முரணினைக் கொண்டு நின்றால்
மூர்க்கத்தை அழிப்பான் கந்தன்
பவவினை பறந்து போக
பற்றுவோம் கந்தன் பாதம்!

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண், ஆஸ்திரேலியா

காலைக்கதிர் Kalaikkathir

# வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே நோக்கம்

## மன்னார் அரச அதிபர் அன்னம்மா ஸ்ரான்லி டிமெல் கூறுகிறார்

மன்னார் மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மாவட்டத்தில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதோடு, இன மத நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதே எனது மிக முக்கிய நோக்கமாக உள்ளது என மன்னார் மாவட்டத்தின் புதிய அரச அதிபராக நேற்று (திங்கட்கிழமை) காலை பதவியேற்ற மாவட்ட அரச அதிபர் அன்னம்மா ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட புதிய அரச அதிபராக நியமிக்கப்பட்ட திருமதி அன்னம்மா ஸ்ரான்லி டி மேல் நேற்று (திங்கட்கிழமை) காலை தனது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அங்கு உரையாற்றிய அவர் –

எனது சொந்த மாவட்டமாகிய மன்னார் மாவட்டத்தில் இன்றைய தினம் (நேற்று) திங்கட்கிழமை அரசாங்க அதிபராக மீண்டும் கடமையாற்ற எனக்கு வழி அமைத்த இறைவனுக்கு முதலில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மன்னார் மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக உள்ளது. இந்த மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் என்னை மன்னார் மாவட்ட அரச அதிபராக நியமித்த அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த மாவட்டத்தின் சகல துறை சார் அனுபவங்களையும் ஏற்கனவே கொண்டுள்ளேன் என்ற அடிப்படையில், இந்த மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, மாவட்டத்தில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதோடு, இன மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதே எனது மிக முக்கிய நோக்கமாக உள்ளது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இங்கு கடமையாற்றுகின்ற சகல மதத்தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், அனைத்து அதிகாரிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோரது மேலான ஒத்துழைப்பை நான் எதிர்பார்த்துள்ளேன்.

நிச்சயமாக அனைவரது ஒத்துழைப்புடனும் என்னுடைய பதவிக் காலப்பகுதியில் மன்னார் மாவட்டம் முன்னேற்றம் அடையும் என்கின்ற மிகுந்த நம்பிக்கையைக் கொண்டுள்ளேன். – எனத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி அன்னம்மா ஸ்ரான்லி டிமெல் கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மன்னார் கமநல சேவைத் திணைக்கள உதவி ஆணையாளராகவும், மன்னார் பிரதேச செயலாளராகவும், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபராகவும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளராகவும், வட மாகாண சபையின் பிரதி பிரதம செயலாளராகவும் கடமையாற்றி உள்ளார்.

யுத்த சூழ்நிலையான கால கட்டத்திலும், திடீர் அனர்த்த பாதிப்புக்கள் மத்தியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இரவும் பகலும் அயராது பாடுபட்டார்.



அரச பணிகளுக்கு அப்பால் மனித நேயத்துடனும் சேவையாற்றினார். அறிவு, ஆளுமை, வல்லமை, நிர்வாக திறமை, நீதி நடுநிலை, நேர்கொண்ட செயல் திறன், விவேகம், துணிவு கொண்ட 'வீர பெண்மணியாக' தனது கடந்த கால பணிகளை மேற்கொண்டார்.

நீண்ட காலத்திற்கு பின்னர் மீண்டும் மன்னார் மாவட்ட மக்களுக்காக பணி செய்யக்கூடிய ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து மன்னார் மாவட்ட மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# கொரோனாத் தொற்று பரவும் அச்சம்: ஹபராதுவ பிரதேச சபைக்குப் பூட்டு!

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஹபராதுவ பிரதேச சபையை நேற்று (திங்கட்கிழமை) தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் தவிசாளர் திலின் விதானகமகே இதனைத் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

குறித்த பிரதேசசபையில் கடமையாற்றும் பெண்ணொருவரின் கணவர், கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஆகவேதான், பிரதேசசபையின் செயற்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், அப்பெண் கடமையாற்றும் பிரிவில் கடமையாற்றும் 10 பேர் தனிமைபடுத்தப்பட்டுள்ளனர். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொழிநுட்பக் கோளாறு எதுவும் பி.சி.ஆர். இயந்திரத்தில் இல்லை

### சீனத் தூதரகம்

முல்லேரியா வைத்தியசாலையில் (கொழும்பு கிழக்கு ஆதார வைத்திய சாலை) உள்ள பி.சி.ஆர். இயந்திரத்தில் தொழில்நுட்பக் கோளாறு எதுவும் ஏற்படவில்லையென சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கிழக்கு முல்லேரியா வைத்தியசாலையில் அண்மையில் திருத்தப்பட்ட பி.சி.ஆர். இயந்திரம் மீண்டும் பழுதடைந்துவிட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலேயே இது தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்டுள்ள சீனத் தூதரகம், அண்மைய வாரங்களாக வேகமாகப் பரிசோதிக்க பயன்படுத்தப்பட்ட பரிசோதனைகளுக்கான உதிரிப்பாகங்கள் பற்றாக்குறையால் அந்த இயந்திரத்தின் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

தற்போது புதிய பரிசோதனை உதிரிப் பாகங்களின் தேவை ஏற்பட்டுள்ளது என்றும் அவை 3 – 4 நாள்களில் வரும் எனவும் அந்தப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாகன இறக்குமதிக்குத் தடை ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்

கொழும்பு, நவ.17

வாகன இறக்குமதி தடையின் விளைவாக அந்நிய செலாவணி இழப்பு தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் தெரிவிக்க வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அவருடனான சந்திப்புக்காகக் காத்திருக்கின்றது.

இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதியுடன் சந்தித்து கலந்துரையாடுவோம் என்ற நம்பிக்கை உள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் சிரஜுந்த கமகே கூறியுள்ளார்.

ஜனாதிபதியை சந்தித்து வாகன இறக்குமதி தடை தொடர்பாகக் கலந்துரையாடவும் கோரியுள்ளபோதும் கொரோனா தொற்று நிலைமை காரணமாக அது தாமதமாகிவிட்டது என்றும் நவம்பர் இறுதிக்குள் அவரைச் சந்திக்க முடியும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வாகன இறக்குமதி மீதான தடை மூலம் அந்நிய செலாவணி இழப்புகள் இருப்பதை விட அதிகமாக இருக்கும் என்பதை ஜனாதிபதிக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகன இறக்குமதியை தடை மூலம் சுமார் 100 கோடி அந்நிய செலாவணி சேமிக்கப்படும் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

ஆனால் உண்மையில், தடையின் நேரடி விளைவாக நாடு சுமார் 200 கோடியை இழந்து வருகிறது என்றும் வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தலைவர் சிரஜுந்த கமகே சுட்டிக்காட்டியுள்ளார்.

# வெளிநாடுகளில் சிக்கிய 92 பேர் நாடு திரும்பினர்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கைக்கு வருகை தர முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 92 பேர் நேற்று திங்கட்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

ஐ.நா. அமைதி காக்கும் படையில் பணியாற்ற சூடான் சென்ற இராணுவ அதிகாரிகள் 79 பேரும் கட்டாருக்கு தொழிலுக்காகச் சென்ற 12 பேரும் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

அத்துடன் பாகிஸ்தானில் தங்கியிருந்த 5 இலங்கையர்களும் நேற்று காலை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நாட்டுக்கு வந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

# அனர்த்த முகாமைத்துவக் கூட்டம் கண்டாவளை பிரதேச செயலகத்தில்

அனர்த்தங்களைத் தடுப்பது தொடர்பான முன்னாயத்த கூட்டம் நேற்று திங்கட்கிழமை கண்டாவளை பிரதேச செயலகத்தில் இடம்பெறற்து.

கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்கள், கிராமசேவையாளர்கள், படையினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கண்டாவளை பிரதேசத்தில் அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், அவற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்தல், பாதுகாப்பான அமைவிடங்களை அடையாளம் காணல் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டது.

இரணைமடு குளம் மற்றும் கல்மடு குளம் ஆகியன வான்மட்டத்தை அடைந்து மேலதிக நீர் வெளியேறும் சந்தர்ப்பத்தில் அதிகளவு பாதிக்கப்படக்கூடிய பிரதேசமாகக் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவு காணப்படுகின்றது.

இந்த நிலையில் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பிலும், அனர்த்தத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பிலும் விசேடமாக ஆராயப்பட்டது.

தற்போது மாவட்டத்தில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகிவரும் நிலையில் குளங்களின் நீர்மட்டமும் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. இவ்வாறான நிலையில் பிரதேசம் மற்றும் மாவட்டத்தை அனர்த்தத்திலிருந்து பாதுகாப்பது தொடர்பிலும், மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்படாமலும், வாழ்வாதாரங்களில் தாக்கம் ஏற்படாத வகையிலும் முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கான முன்னாயத்தங்கள் தற்போது இடம்பெற்ற வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் இரண்டாவது முனையம் நிர்மாணிப்பு!

கொழும்பு, நவ.17

கட்டுநாயக்க சர்வதேச நிலையத்தில் பல அடுக்குகளைக் கொண்ட இரண்டாவது முனையத்தை நிர்மாணிக்கும் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 18 ஆம் திகதி கட்டுமாணப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பார். இந்த முனையத்தை நிர்மாணிக்க 10 ஆயிரத்து 700 கோடி ரூபாவுக்கு மேலான தொகை செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டதுக்கு ஜப்பான் முதலீடு செய்கிறது. இதனை மூன்றாண்டுகளுக்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இராணுவத் தளபதியின் மிரட்டல்

'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பார்கள்.

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவின் நிலையையும் இப்படித்தான் கூறவேண்டியுள்ளது.

முப்பது ஆண்டு காலம் மிக மோசமான போரை எதிர்கொண்டவர்களுள் அவரும் ஒருவர். புலிகள் கிளப்பிய பீதி இன்னும் அவர் மனதில் இருந்து விலகவேயில்லை, நிரந்தரமாக உறைந்திருக்கின்றது போலும். அத்தகைய மரண பயத்தைப் புலிகள் அவர் உட்பட படைத்தரப்பினர் மத்தியிலும், தென்னிலங்கைச் சிங்களத்தின் ஆழ் மனதிலும் பதித்துச் சென்றிருக்கின்றார்கள் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

அதனால்தான் என்னவோ யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கழிந்த பின்னரும், இன்னும் கூட புலிக் கிலியில் அவர் பேசுகின்றார், கருத்துரைக்கின்றார்.

போரில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு தமிழ் மக்கள் செய்யக் கூடிய நினைவேந்தலைக் கண்டு அஞ்சும் விதத்தில், அப்படி நினைவேந்தல் செய்வது தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்புக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையிலும், அவ்வமைப்புக்குப் பரப்புரை செய்யும் நோக்கிலும் அமையக் கூடியது என்ற சாரப்பட அவர் பிதற்றியிருப்பது இந்தப் புலிக் கிலி இன்னும் அவர் மனதை விட்டு அகலவில்லை என்பதைக் காட்டும் சான்று அன்றி வேறில்லை.

இப்படி மூத்த இராணுவ அதிகாரி, இறந்த புலிகளுக்காக அவர்களின் உறவுகள் நினைவேந்தல் செய்வது மீண்டும் புலிகளுக்குப் புத்துயிர்ப்பு கொடுக்கும் நடவடிக்கை என்று அஞ்சுவது அர்த்தமற்றது.

மீண்டும் புலிகள் உருவாகிவிடுவார்கள் என்ற அச்ச மனநிலையோடுதான் இராணுவத் தளபதி முதல் கொண்டு நாட்டின் தலைவர் வரை தமிழர்களை அணுகுவார்களாயின் – தமிழர்களின் ஒவ்வொரு விடயங்களையும் கையாளுவார்கள் எனின் – அந்த வழியையே நாடுங்கள் என்று அவர்களே தமிழர்களைப் புலிகளின் பாதைக்கு நெட்டித் தள்ளிக் கட்டாயப்படுத்துகின்றார்கள் என்றுதான் அர்த்தம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியிருக்கின்ற படி, சுகாதார அமைச்சின் விதிமுறைகள், வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்களுக்கு அமைய சமூக இடைவெளியைப் பின்பற்றி, நடத்தப்படும் நிகழ்வை, சுகாதார சட்ட விதிகளைக் காட்டி சட்ட ரீதியாகத் தடைசெய்யவோ, நடவடிக்கை எடுக்கவோ யாருக்கும் உரிமையும் இல்லை, அதிகாரமும் இல்லை – அது, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் ஜனாதிபதி செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்ட்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும் கிடையாது.

அதையும் மீறி அவர் கருத்துரைப்பது – விடுதலைப் புலிகளை நினைவு கூர்பவர்களை, பொது வெளியில் ஒன்று கூடி அஞ்சலிப்போரை, சுகாதார விதிமுறைகளின் கீழ் தனிமைப்படுத்துவோம் என எச்சரிப்பது – சட்டத்துக்கு முரணாக மேற்கொள்ளும் அச்சுறுத்தலாகும். அதிகாரத்தையும், பதவியையும் பயன்படுத்தி, சட்டத்துக்கு முரணாக மக்களை மிரட்டும் மனித உரிமை மீறல் நடவடிக்கையுமாகும்.

கடந்த சனிக்கிழமை கூட மிரிஸவெடிய புண்ணியபூமியில் மல்வத்தைப் பிரிவு தேரர்களின் ஏற்பாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பங்குபற்றிய மிகப்பெரிய ஒன்று கூடல் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியைப் பொறுப்பேற்று ஓராண்டு பூர்த்தியாகுகின்றமையை ஒட்டியும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டும், கொரோனாத் தொற்றிலிருந்து மக்களை விடுவிக்கப் பிரார்த்தித்தும் அங்கு நடைபெற்ற சமய நிகழ்வில் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஐந்நூறு மகா சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

அதற்கெல்லாம் பாயாத கொரோனாத் தொற்றுத் தொடர்பான சுகாதார விதிமுறைகள், அந்த விதிமுறைகளுக்கு அமைவாக, வடக்கில் மக்கள் நடத்தும் நிகழ்வில் மட்டும் – அதுவும் யுத்தத்தில் மடிந்த தமது உறவுகளுக்காக தமிழ் மக்கள் நடத்தும் அஞ்சலி நிகழ்வில் மட்டும் – பாயும் என்று இராணுவத் தளபதி மிரட்டுவது, தமிழர்கள் தொடர்பில் சிங்களத்தின் – பாகுபாடான – பாரபட்சமான – அடக்குமுறையான – அச்சுறுத்தல் பாங்கிலான – சட்ட விரோதமான – கொடூர – நடவடிக்கையன்றி வேறில்லை.

ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் மார்ச் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் பரிசீலனைக்கு எடுக்கப்படும்போது ஆளும் தரப்பின் – இராணுவத் தளபதியின் – இந்த சட்ட விரோத அச்சுறுத்தல் அட்டகாசமும் முக்கிய விவகாரமாக முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

தமிழினத்தின் மீதான இராணுவ அடக்குமுறை – சட்ட விரோத அச்சுறுத்தல் – தொடருகின்றது என்பதற்கு இந்த மிரட்டல் பாணி உத்தரவு நல்ல சான்று. அதனை வசமாகப் பயன்படுத்தத் தமிழர் தரப்புத் தவறக்கூடாது.

# இளைஞர்களுக்கு குறைந்த வட்டியில் வணிகக் கடன்!

## நாமல் மத்திய வங்கியுடன் கலந்துரையாடல்



சிறு தொழில் நிறுவனங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ள இளைஞர்களுக்கு அரச வங்கிகள் மூலம் குறைந்த வட்டியுடன் வணிகக் கடன்களை பெற்றுக்கொடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இலங்கை மத்திய வங்கியுடன் கலந்துரையாடி வருகின்றார்.

இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ள இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ -

அண்மையில் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டபோது, இளைஞர்கள் வணிக கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போது தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எனக்குத் தெரிவித்தனர்.

இந்நிலையில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு மூலம், இளைஞர்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இன்றி நிதி உதவியைப் பெற உதவும் ஒரு கடன் திட்டத்தை வடிவமைக்க இலங்கை மத்திய வங்கியுடன் அமைச்சு கலந்துரையாடல்களைத் தொடங்கியுள்ளது. - எனக் கூறினார்.

தற்போது, தனியார் மற்றும் அரச வங் கிகளில் இந்த கடன்களுக்கான வட்டி மிக வும் அதிகமானது எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இது சிறு நிறுவன உரிமையாளர்களுக்கு செலுத்த முடியாமல் போகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

2021 வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி கடன் திட்டத்தை நிறுவ அமைச்சு போதுமான நிதியை ஒதுக்குகிறது, இதனால் இளைஞர்களுக்கு இலகுவாக வணிகக் கடன்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிட்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# யாசகங்களைக் கட்டுப்படுத்த கொழும்பில் நடவடிக்கைகள்!

கொழும்பில் போக்குவரத்து சமிக்ஞைக்கு அருகே நிற்கும் யாசகர்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, கொழும்பில் யாசகர்களை தடுத்து வைக்க வார இறுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது எனக் கூறினார்.

கொரோனா தொற்று காலகட்டத்தில் யாசகர்கள் தங்கள் வாகனங்களை அணுகுவது தொடர்பாக பொதுமக்கள் கவலைகளை வெளியிட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனை அடுத்தது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் யாசகர்கள் அனைவரும் உண்மையானவர்கள் அல்லர் என்பது தெரிய வந்துள்ளது.

குறிப்பாக கொழும்பில் உள்ள பெரும்பாலான யாசகர்கள் ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கு பணம் சேகரிக்கப்பட்டு பொறுப்பான ஒருவரிடம் ஒப்படைக்கப்படுகிறது என்றும் இவ்வாறான போலி நபர்களிடமிருந்து உண்மையான யாசகர்களை அடையாளம் காண ஒரு சிறப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது என்றும் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

அதன்படி உண்மையான யாசகர்கள் அடையாளம் காணப்பட்டு சமூக சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்றும் போலி யாசகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அஜித் ரோஹன கூறினார்.

# வைரஸைக் கட்டுப்படுத்த அரசு உரிய நேரத்தில் முடிவெடுக்கும்!

## பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாள் தெரிவிப்பு



கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நேரத்தில் உரிய தீர்மானத்தை எடுக்கும். எதிர்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது எனபொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.


பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த உலகளாவிய மட்டத்தில் முன்னெடுக்கப்படும் சுகாதார வழிமுறைகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என எதிர்க்கட்சி தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரசியல் தரப்பினரது ஆலோசனைகளைகொண்டு கொவிட் - 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது.

சுகாதார சேவையாளர்களின் ஆலோசனைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. நெருக்கடியான சூழ்நிலையில் அரசியல் நோக்கத்தை கொண்டு எதிர்தரப்பினர் போலியான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். - என்றார்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
"காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர,
நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சி விடக்கூடாது."
- தமிழகக் கவிஞர் அறிவுமதி



# தேராவில் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் ஆரம்பம்!

## இராணுவம், பொலிஸார் நேரில் சென்று விசாரணை






(சண்முகம் தவசீலன்)

விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் பணிக் குழுவினரால் நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதானப்பணிகள் ஆரம்பித்து வைக்கப் பட்டன.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லப் பணிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் மாவீரர்களின் பெற்றோர்கள் இணைந்து தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று அங்கே வீரர்களுக்குச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து சிரமதானப் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சம்பவ இடத்துக்கு வருகை தந்த தர்மபுரம் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் இராணுவப் புலனாய்வாளர்கள், சிரமதானப் பணிகளை முன்னெடுத்தவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டனர்.

குறித்த இடத்தில் சிரமதானப் பணிகளைச் செய்வதற்கு உரிய பிரதேச சபையின் அனுமதியைப் பெற்று சுகாதார நடைமுறைகளுக்கு அமைய குறித்த சிரமதானப் பணிகளை முன்னெடுக்குமாறு பொலிஸார் தெரிவித்தனர் என்று பணிக் குழுவைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்

அத்தோடு பணிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் வழமை போன்று இம்முறையும் நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வை மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் அனைத்தையும் மேற்கொண்டுள்ளனர்.

சுகாதார நடைமுறைகளைப் பேணி, முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளிகளைப் பேணிக் கைகளைக் கழுவி அந்த நிகழ்வுகளில் பங்கெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், மக்களைச் சுகாதார நடைமுறைகளைப் பேணி வருகை தந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்த வருகை தருமாறும் பணிக்குழுவினர் மேலும் அழைப்பு விடுத்துள்ளனர்.

# 12 ஆயிரத்தை நெருங்கும் கொரோனாக் குணமடைவு!

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்தை நெருங்குகின்றது.

அந்தவகையில் கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 311 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை கொரோனா தொற்று உறுதியாகியோரின் மொத்த எண்ணிக்கை 17 ஆயிரத்து 287 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 423 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 562 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 58 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் ஆழியவளை மாணவி தீபிகா சாதனை



இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் ஆழியவளை சி.சி. தமிழ்க் கலவன் பாடசாலையில் தோற்றிய மாணவி பாலகுமார் தீபிகா 191 புள்ளிகளைப் பெற்று அக்கோட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

கஷ்டப் பிரதேசத்திலுள்ள இப்பாடசாலையிலிருந்து இம்முறை புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய 24 மாணவர்களில் 8 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளைத் தாண்டி சித்தியடைந்துள்ளார்கள்.

இதேவேளை, உடுத்துறை ஆரம்பப் பிரிவு பாடசாலையில் 7 மாணவர்களும், கேவில் அ.த.க. பாடசாலையில் 3 மாணவர்களும், கட்டைக்காடு றோ.க. தமிழ்க் கலவன் பாடசாலையில் 2 மாணவர்களும், வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும், மாமுனை அ.த.க. பாடசாலையில் 2 மாணவர்களும், நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும், குடத்தனை கரையூர் றோ.க. தமிழ்க் கலவன் பாடசாலையில் 2 மாணவர்களும், செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையில் ஒரு மாணவருமாக மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் 29 மாணவர்கள் இம்முறை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

# கொரோனா தொற்றிய பொலீஸாரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 785 ஆக அதிகரித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள் 81 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த 191 பேர் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்பு மத்திய பஸ் நிலையம் திறக்க அனுமதி

கொழும்பு - புறக்கோட்டை மத்திய பஸ் நிலையம் மற்றும் பெஸ்டியன் மாவத்தையில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையம் என்பவற்றை சுகாதார நடை முறைகளுடன் திறப்பதற்கு நேற்று (திங்கட்கிழமை) முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பஸ்களைக் கண்காணிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மீறி யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வழித்தடப் பகுதியில் பயணிகளை ஏற்றிச் சென்றமை தொடர்பாக சாரதி மற்றும் நடத்துநர் கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மேற்படி கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆணைக்குழு மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தாக்க காலப்பகுதியிலும் சேவையில் ஈடுபடுகின்ற சில பஸ்கள் அதிக பயணிகளுடன் செல்கின்றன என முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் இதனைக் கண்காணிப்பதற்காகவே குழுக்களை நியமித்துள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

# கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை இரு வாரங்களில் சடுதியாக அதிகரிப்பு

**அரச மருத்துவ சங்கம்**

இலங்கையில் கடந்த 14 நாள்களில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலானது கொழும்பு மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதியில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக அந்த சங்கத்தின் மருத்துவர் ஹரித அலுத்கே சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான 704 பேரில் 701 பேர் மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அரசாங்கத் தகவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய அந்த கொத்தணிகளில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 788 ஆக அதிகரித்துள்ளது.

# விமானப் படையில் பெண் விமானிகள் நியமனம் பெற்றனர்

இலங்கை விமானப்படை வரலாற்றில் முதல் முறையாக இரண்டு பெண் அதிகாரிகள் விமானிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சீனக்குடா விமானப்படைத் தளத்தில் இன்று நடைபெற்ற 61 ஆவது அதிகாரிகளின் பதவியேற்பு மற்றும் விங்ஸ் அணி வகுப்பு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின்போதே இரண்டு பெண் அதிகாரிகள் விமானிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை விமானப் படை அறிவித்துள்ளது.

# புதிய அரசமைப்புக்கு மகா சங்கம் முன்மொழிவு

இலங்கைக்கான புதிய அரசமைப்புக்காக முன்வைக்கப்பட்ட மாற்று முன்மொழிவுகள் உள்ளடங்கிய நூல் நேற்று பிரதமர் மஹிந்தவிடம் கையளிக்கப்பட் டுள்ளது.

பௌத்த சாசன செயலணி மற்றும் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி மஹா சங்கத்தினரால் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து இந்த நூல் பிரதமரிடம் வழங்கப்பட்டது.

அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின், தேசியக் கொள்கை திட்டமிடல் குழு, சட்டம், அரச நிர்வாகம், தேசிய பாதுகாப்பு மற்றும் சுவதேச கொள்கை துணைக் குழுவால் இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

இந்தத் துணைக்குழுவில், வஜிராராம வாசி ஞானசீஹ தேரர், ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி பாலித பிரனாந்து, ஜனாதிபதி சட்டத்தரணி பிரசன்னலால் டி அல்விஸ், ஜனாதிபதி சட்டத்தரணி வைத்யரத்ன, கலாநிதி பாலித கோஹொன, பேராசிரியர் லலித்சிறி குணருவண், ரஞ்சித் தென்னகோன், கலாநிதி நிமல் ஹெட்டிஆராச்சி, ஓய்வுபெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் சந்திர நிமல் வாகிஷ்ட ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

# கொரோனா நெருக்கடியை இந்து எதிர்கொள்வதற்கு ஆஸ்பத்திரிகள் தயாரா?

ந.லோகதயாளன்



இலங்கையில் கொரோனாவின் ஆட்டம் தீவிரமடையும் நிலமையில் அதனை எதிர்கொள்ள எமது சுகாதாரத் துறையினர் தயாராகவுள்ளனரா என்ற பெரும் கேள்வி எழும்புகின்றது. அதுவும் முக்கிய துறை சார்ந்த அந்த விடயம் மறைக்கப்படுகின்றதா என்ற அச்சமும் வெளியிடப்படுகின்றது.

கொரோனாவினால் பாதிப்புற்றோர் எண்ணிக்கை 18 ஆயிரத்தைத் எட்டியும் மரணம் 58ஐ கடந்தும் விட்டது.

இதற்காகக் கொரோனாப் பராமரிப்பு வைத்தியசாலைகள் மட்டும் அதிகரிக்கின்றன. இருப்பினும் அந்த வைத்தியசாலைகள் ஏறக்குறைய ஓர் தனிமைப்படுத்தல் மையங்கள் போன்றே செயல்படுகின்றன என்றே கூற முடியும்.

அதாவது இங்கே பராமரிக்கப்படும் கொரோனா நோயாளர் எவருக்காவது மூச்சுத்திணறல் ஏற்பட்டால் அதை எதிர்கொள்ள ஒரு 'வென்டிலேற்றர்' வசதி எங்குமே கிடையாது என கூறப்படுகின்றமை அதிர்ச்சி அளிக்கின்றது.

இதன் காரணமாக, கொறொனா நோயாளர்களைக் கையாளக் கூடிய விதத்தில் நாட்டில் உடனடியாக 15 வைத்தியசாலைகளில் தனியான சத்திர சிகிச்சைக்கூடம், பிரசவ அறை, இரத்தவங்கி என்பன 'வென்டிலேற்றர்' வசதியுடன் அமைக்குமாறு சுகாதார அமைச்சு எழுத்தில் கடிதம் அனுப்பியுள்ளது.

ஏனெனில் நாட்டில் கொரோனா தாக்கம் அதிகரிப்பதனால் பாதிப்புக்களை எதிர்கொள்ளவும் - குறிப்பாக கர்ப்பிணிகள் கொரோனா நோய் தாக்கத்திற்கு இலக்கானால் அவர்களை சாதாரண பிரசவ அறைகளில் அனுமதிப்பதில் ஆபத்தை எதிர்நோக்க நேரிடலாம் என்பதால் - அதற்கு ஏற்ப தனியாக ஓர் இடம் அமைப்பதே இதன் நோக்கமாகக் கூறப்படுகின்றது.

நோக்கம் சரியாக இருப்பினும், இதற்கு மேலும் போதிய இடவசதி இன்மை, வைத்தியர்கள் - தாதியர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட பாரிய நெருக்கடிகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

இவ்வாறு விசேடமாக அமைக்க சிபார்சு செய்யப்பட்ட இடங்களில் வடக்கிலும் இரு இடங்களை மத்திய சுகாதார அமைச்சு பரிந்துரைத்தபோதும் அதில் ஒரு வைத்தியசாலை தம்மிடம் இடவசதி இல்லை என பதிலளித்துள்ளது. இரண்டாவது வைத்தியசாலை பெரும் நெருக்கடியின் மத்தியில் முயற்சிக்கின்றது.

இதேநேரம் நாட்டில் முன்னர் மலேரியா, தொடர்ந்து டெங்கு போன்றவை வரும்போது இருந்த அச்சம்போய், தற்போது அவையும் சாதாரண - தவிர்க்க முடியாத நோய்கள் என்று கருதும் பட்டியலுக்குள் அடக்கப்பட்டமை போன்று கொரோனாவும் அடக்கப்பட்டு வாழும் நிலைமைதான் ஏற்படுமோ என்ற கேள்வியும் எழுகின்றது.


அவ்வாறுதான் நிலைமை என்று ஏற்பட்டாலும், கொரோனா நோய் ஏற்பட்டால் 100 இற்கு 5 வீதமானவர்கள் வரையில் மூச்சுத் திணறல் ஏற்படக்கூடும். அதனை எதிர்கொள்வதற்கு வென்டிலேற்றர் கருவி வசதி வேண்டும் என்ற நிலையில் இலங்கையில் இதன் கையிருப்புத் தொடர்பில் கேள்வி எழுப்பப்படுகின்றது. கொரோனா அச்சம் ஏற்பட்ட பின்பு வென்டிலேற்றர் கொள்வனவு செய்யப்படவே இல்லை எனக் குற்றம் சாட்டப்படுகின்றது. இருப்பினும் சுகாதார அமைச்சில் 150 வரையிலான வென்டிலேற்றர் கையிருப்பு இருக்கும் போது, எந்த வைத்தியசாலையிலிருந்தும் தேவை என இன்னும் கோரிக்கை விடப்படவில்லை என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றமை இவ்விடயத்தில் வைத்தியசாலகளின் செயற்றிறனின்மையைக் காட்டுவதாகக் கொள்ள வேண்டியுள்ளது.

இதேநேரம் வடக்கு வைத்தியசாலைகளுக்கு, தற்போது வடக்கு மாகாண மக்களிற்கு அப்பால் தெற்கில் இருந்தும் கொரோனா நோயாளர்கள் கொண்டு வரப்படுகின்றனர். இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள வென்டிலேற்றர் நிலைமை தொடர்பில் ஆராய்ந்தால், யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் போதனா வைத்தியசாலைக்கு அப்பால் தெல்லிப்பளை, பருத்தித்துறை ஆகிய வைத்தியசாலைகளில் தலா 3 வீதம் 6 வெண்டிலேற்றர்கள் உள்ளன. இதேபோன்று மன்னார் மாவட்டத்திலே மாவட்ட வைத்தியசாலையில் மட்டும் அனைத்து தேவைக்காகவும் 5 வெண்டிலேற்றர்களுடன் இரு மயக்க மருந்து நிபுணர்களும் உள்ளனர்.

கிளிநொச்சியில் மாவட்ட வைத்தியசாலையில் 3 வெண்டிலேற்றர்களுடன் இரு மயக்க மருந்து நிபுணர்களும் உள்ளனர்.

முல்லைத்தீவில் 3 வெண்டிலேற்றர்கள் உள்ள அதேநேரம் வடக்கின் ஒரேயொரு போதனா வைத்தியசாலையில் 16 வெண்டிலேற்றர்கள் என மாகாணம் முழுமையாக 33 வெண்டிலேற்றர்கள் மட்டுமே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதனால் எதிர் காலத்தில் கொரோனா தாக்கம் அதிகரிப்பின் இவை தொடர்பில் மருத்துவர்களும், மருத்துவத்துறை நிர்வாகிகளும் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுவதோடு, மாறாக, ஒரு நெருக்கடி ஏற்பட்ட பின்பு நோயாளியை அனுமதிக்க இடமில்லை என்றோ அல்லது அவ்வாறானவர்களை ஏன் சாதாரண வைத்தியசாலைகளில் அனுமதித்தனர் என்றோ கூக்குரல் இட்டு பயன் கிட்டாது எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.


Ministry of Health

தேவையான எண்ணிக்கை வெண்டிலேற்றர்களை இங்கு தருவித்தாலும் அவற்றைக் கையாள போதிய மருத்துவர்கள், நிபுணர்கள் தேவை என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

## வரவு - செலவுத் திட்டம் மக்களுக்கு நீண்டகால நிவாரணம் அளிக்கும்!



2021 ஆம் ஆண்டுக்காக நாளை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவு திட்டத்தின் மூலம் நீண்ட காலத்துக்கு நீடித்து இருக்கக் கூடிய நிவாரணங்கள் பொதுமக்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இன்று நாடாளுமன்றத்தில் சமப்பிக்கப்படவுள்ள 2021 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டம் தொடர்பாக நேற்று கருத்துத் தெரிவித்த நிதி இராஜாங்க அமைச்சர், கிராமிய பொருளாதாரம் மற்றும் கிராமிய கைத்தொழில் துறையை மேம்படுத்தி பொருளாதார அடிப்படையை ஏற்படுத்துவதற்கு இம்முறை வரவு - செலவு திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

'சௌபாக்கிய தொலைநோக்கை' பூர்த்தி செய்வதற்கு இந்த வரவு - செலவுத் திட்டம் ஏதுவாக அமையும் என்றும் அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்துள்ளார்.

## 90 லட்சம் ரூபா பெறுமதியிலான கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது!

அநுராதபுரம் பகுதியில் 90 லட்சம் ரூபா பெறுமதியான கேரளா கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று திங்கட்கிழமை கலால் திணைக்களத்தினரும் பொலிஸ் போக்குவரத்து பிரிவினரும் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என கலால் திணைக்களத்தின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கிளிநொச்சியிலிருந்து வலஸ்முல்ல பகுதிக்கு இந்த கேரளா கஞ்சாவை ஏற்றி வந்து கொண்டிருந்த போதே கலால் திணைக்களத்தினர் அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது சொகுசு ஜீப் வண்டியில் வந்துள்ள சந்தேக நபர் அதனை மிகவும் சூட்சுமமான முறையில் ஜீப் வண்டியுல் மறைத்து எடுத்துவந்துள்ளமையுடன், இதனை சோதனைச் செய்த கலால் திணைக்களத்தினர் அதிலிருந்து 30 கிலோ கிராம் கேரள கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை இன்று செவ்வாய்கிழமை அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தவுள்ள கலால் திணைக்களத்தினர், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

## சிங்கள சினிமா பிரபல பின்னணிப் பாடகர் போல் பெர்னாண்டோ நேற்று காலமானார்



சிங்கள சினிமாத் துறையின் பிரபல பின்னணிப் பாடகர் போல் (வயது - 69) பெர்னாண்டோ நேற்று (திங்கட்கிழமை) காலமானார்.

போல் பெர்னாண்டோ, உடல்நலக் குறைவு காரணமாக களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தநிலையிலேயே காலமாகியுள்ளார்.

# மட்டு. மக்கள் கூட்டமைப்புக்கு அளித்த வாக்குகள் வீணானவை!

## என்கிறார் அமைச்சர் வியாழேந்திரன்

மட்டக்களப்பு மாவட்ட மக்களால் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் வீண் வாக்குகள். அவர்களால் நூற்றுக்கணக்கான வர்களின் வேலைவாய்ப்புக்கள் இல்லாமல் போயுள்ளது, பலரின் அடுப்பு எரியும் நிலைமை இல்லாமல் போயுள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலைக் கிராமத்தில் அவரது ஏறாவூர் பற்றுக்கான காரியாலயத் திறப்புவிழா கடந்த (ஞாயிற்றுக்கிழமை) மாலை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு காரியாலயத்தை திறந்து வைத்து கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது பிறப்பின் நோக்கம் என்னவாக இருக்க வேண்டும் என்றால் நமக்கு முன்னால் 400 பேர் எழுந்துநின்று மாலைபோடுவதும், கைதட்டுவதுமல்ல. எம்மால் 4 பேர் வாழ்ந்தார்களா என்பதாகத்தான் இருக்க வேண்டும். எனவே எமக்கு மக்கள் தந்துள்ள ஆணையால் 400 பேரல்ல, 4, 000 இற்கு மேற்பட்ட வர்களை வாழவைப்பதற்கான வேலைத் திட்டங்களை நாங்கள் தற்போது முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் எமது மக்களின் அரசியல் இருப்பை உறுத்திப்படுத்துவதற்காக மக்களின் நிலம், வளம், பொருளாதாரம், கல்வி, விளையாட்டு போன்ற துறைகள் கட்டியெழுப்பப்படல் வேண்டும். சமத்துவத்துடன் ஏனைய சமூகங்களுக்கு நிகராக எமது சமூகம் தலைநிமிர்ந்து வாழவேண்டும். யாருக்கும் கைகட்டி, தலைகுனிந்து வாழக்கூடாது என்பதுதான் எமது அடிப்படை நோக்கமாகும்.

அதற்காகவேண்டி எமது மக்களுக்கு உரிமையுடன் சார்ந்த அரசியலைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். நானும் எதிர்க்கட்சியில் இருந்து செயற்பட்டவன். கடந்த நான்கரை வருடத்தில 20 பேருக்குக்கூட எங்களால் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட மக்களால் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்க அளிக்கப்பட்ட வாக்குகள் வீண் வாக்குகள். அவர்களால் நூற்றுக்கணக்கானவர்களின் வேலைவாய்ப்புக்கள் இல்லாமல் போய்யுள்ளன, பலரின் அடுப்பு எரியும் நிலைமை இல்லாமல் போயுள்ளது. குறிப்பாக சாணக்கியன் எம்.பி. வேலைவாய்ப்பு தொடர்பில் துள்ளிக் குதிக்கின்றார்.

உரிமை பேசி மக்களிடம் வாக்குக் கேட்டு வந்தவர்கள் உரிமையைப் பெற்றுக்கொடுக்கலாம். நாங்கள் அபிவிருத்தியைச் செய்கின்றோம் என்றால் ஏன் அவர்களால் உரிமையைப் பெற்றுக் கொடுக்கலாமே? அதனை அவர்களால் செய்யமுடியாது, எனவே அபிவிருத்தியும் செய்ய முடியாது, உரிமையையும் பெற்றுக் கொடுக்க முடியாது, தாங்கள் எதுவும் செய்யாமல், அனைத்தையும் குற்றம் சுமத்துகின்றவர்களாகவே இருந்து வருகின்றார்கள்.

மற்றவரின் சட்டியில் என்ன வேகுது என்று பார்ப்பதைவிட உங்களுடைய சட்டியில் என்ன கருகுது என்று பாருங்கள் என நான் அவ்வாறானவர்களுக்கு ஆலோசனை கூறுகின்றேன். எங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு எங்களால் செய்யக்கூடிய வேலைகளை நாங்கள்செய்துகொண்டுபோகின்றோம்.



மக்களின் பிரச்சினைகளை உண்மையாக நாடிபிடித்துப்பார்த்து அதனை யார் நிறைவு செய்து கொடுக்கின்றாரோ அவர்தான் மக்களால் தெரிவு செய்யப்படுவார். மாறாக மக்களின் பிரச்சினைகளை வைத்துக் கொண்டு பிழைப்பு வாத அரசியல் செய்வாராக இருந்தால் அவர்களை அரசியலில் இருந்து மக்கள் காணாமலாக்கிவிடுவார்கள். - என அவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு தொடர்மாடி குடியிருப்புகளுக்கு இலவச மருத்துவ சேவை முன்னெடுப்பு!

கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள தொடர்மாடி குடியிருப்புக்களில் தொற்றா நோய்களின் மூலம் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நலன் கருதி இலவச மருத்துவ நடமாடும் சேவையை கொழும்பு மாநகர சபையின் நோய் நிவாரணத் திணைக்களம் முன்னெடுத்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை இவ்வாறு இலவச நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், கொழும்பு நகர் பகுதிக்கு உட்பட்ட மக்கள் தங்களது மருத்துவ பிரச்சினைகளை தொலைபேசி மூலமாக அழைத்து 24 மணி நேரமும் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் கொழும்பு மாநகர சபையின் ஆணையாளர் சட்டத்தரணி ரோஹிணி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை கொழும்பு முகத்துவாரம் பகுதியிலுள்ள மெத்சுத செவன தொடர்மாடி குடியிருபில் நடமாடும் மருத்துவ சேவை நடைபெற்றது. இன்று செவ்வாய்க்கிழமை முகத்துவாரம் மினிஜய செவன தொடர்மாடி குடியிருப்பிலும், நாளை புதன்கிழமை முகத்துவாரம் ரண்மின செவன தொடர்மாடி குடியிருப்பிலும் இந்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

19 ஆம் திகதி வியாழக்கிழமை புளுமெண்டால் பகுதியிலுள்ள சிறிசந்த உயனவிலும், 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாளிகாவத்தையிலுள்ள என்.எச்.எஸ். குடியிருப்பு தொகுதியிலும், 21 ஆம் திகதி சனிக்கிழமை முகத்துவாரத்திலுள்ள ரண்திய உயனவிலும், 23 ஆம் திகதி புளுமெண்டால் பகுதியிலுள்ள சிறிமுத்து உயனவிலும், 24 ஆம் திகதி தொட்டலங்கவிலுள்ள முவதொர உயனவிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

25 ஆம் திகதி முகத்துவாரத்திலுள்ள சிறிசந்த செவனவிலும், 26 ஆம் திகதி ரண்முத்து செவனவிலும், 27 ஆம் திகதி சத்ஹிரு செவனவிலும், 28 ஆம் திகதி லக்ஹிரு செவனவிலும் குறித்த இலவச நடமாடும் சேவைகள் காலை 9 மணி முதல் முன்னெடுக்கப்படவுள்ளன.

# பொஸ்கோ வரலாற்றுச் சாதனை! இம்முறை 159 மாணவர்கள் சித்தி

## அஜினி என்ற மாணவி 195 புள்ளிகள்



யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய வரலாற்றில் அதிகமான மாணவர்கள் இவ்வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுள்ளனர்.

புதித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் இம் முறை 228 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

குறித்த மாணவர்களில் 159 மாணவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெட்டுப்புள்ளி 160 ஐத் தாண்டி பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். பாடசாலையின் கடந்த கால சித்திகளுடன் ஒப்பிடும்போது வர லாற்றில் அதி உயர் சித்தியாக 70 வீதம் பதிவாகியுள்ளது.

குறிப்பாக நல்லூர் செட்டித் தெருவில் வசிக்கும் பொறியியலாளர்களான அஞ்ஜிதன், குமுதினி ஆகியோரின் மகளான அஞ்ஜிதன் அஜினி எனும் மாணவி 195 புள்ளிகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பேலியகொடை மீன்சந்தைக்கான பணப்பரிமாற்றம் இணையவழியில்!

பேலியகொட மீன் சந்தையில் பணப் பரிமாற்றங்களை இணைய வழியூடாக (ஒன்லைன்) மேற்கொள்வது தொடர்பாகவும் உள்ளூர் ரின் மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் மற்றும் கடலுணவு ஏற்றுமதியாளர்கள் அண்மைக் காலமாக எதிர்கொள்கின்ற அசௌகரியங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.



கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல்களின் போதே இந்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன. மேற்படி கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர மற்றும் கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பேலியகொட மீன் சந்தையின் வியாபார நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கின்ற முயற்சியின் முதற்கட்டமாக மொத்த வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் கொரோனா பரவுகின்ற வழிகளில் ஒன்றாக பணத்தாள் பரிமாற்றங்களும் அமைவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மொத்த மீன் வியாபார நடவடிக்கையின் போது, பணத்தாள் பரிமாற்றத்துக்கு பதிலாக இணைய வழி பணப்பரிமாற்றத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் இலங்கை வங்கி அதிகாரிகளுடன் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் கலந்துரையாடலில் உள்ளூரின் மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் கடலுணவு ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதிகள், தாங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தியமையுடன், அவற்றுக்குத் தீர்வுகளை வழங்கும் பட்சத்தில் கணிசமானளவு அந்நிய செலாவணியை நாட்டுக்குப் பெற்றுத் தருவதற்குப் பங்களிப்பு செய்ய முடியும் என்ற உத்தரவாதத்தையும் வழங்கியுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடி, உள்ளூரின் மீன் உற்பத்தியாளர்களுக்கும், கடலுணவு ஏற்றுமதியாளர்களுக்கும் நியாயமான தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார் எனவும் கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

# வலி மேற்கு பிரதேச சபை பட்ஜெட் அமோக ஆதரவுடன் நிறைவேற்றம்

## கூட்டமைப்பு, முன்னணி, ஈ.பி.டி.பி. ஓரணியில்!

(எஸ்.நிதர்ஷன்)

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தவிர, ஏனைய அனைத்து உறுப்பினர்களினதும் ஆதரவோடு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள வலிகாமம் மேற்கு பிரதேசபை யின் அமர்வு இன்று நடைபெற்றது.

இதன் போது சபையின் தவிசாளர் நடனேந்திரனால் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வரவு - செலவு திட்டம் மீதான விவாதம் இடம்பெற்றது.

இதன் பின்னர் இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஒருவர் மட்டும் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்க ஏனைய அனைவரதும் ஆதரவுடன் அது நிறைவேற்றப்பட்டது.

25 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பு ஆட்சியமைத்துள்ளது.

இங்கு கூட்டமைப்பில் - 9, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - 6, ஈ.பி.டி.பி. - 4, ஐ.தே.க. - 3, சுயேச்சைக் குழு - 2 உறுப்பினர்கள் என மொத்தமாக 24 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்த னர்.

ஆயினும் சபையின் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் மட்டும் எதிராக வாக்களித்தார். இதனால் 23 மேலதிக வாக்குகளால் வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது.



## விழாக்கள் வேண்டாம் என்கிறார் ஜனாதிபதி

ஜனாதிபதியாகத் தாம் பதவி ஏற்று ஓராண்டு பூர்த்தியாகும் நிலையில், அது தொடர்பிலான விழாக்கள் எதனையும் நடத்த வேண்டாம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ அமோக வெற்றியீட்டினார்.

இதனையடுத்து கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி அனுராதபுரத்தில் கோட்டாபய ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்த நிலையில், நாளை மறுதினம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டு ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. இந்த நிலையிலேயே அவர் விழாக்கள் எதனையும் நடத்த வேண்டாம் என தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்புவோர் எவ்வித நிகழ்வுகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் வீண் செலவுகளை செய்ய வேண்டாம் எனவும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

தாம் பதவி ஏற்று ஓராண்டு பூர்த்தியாகும் நாளை மறுதினம் நாட்டு மக்களுக்கு அவர் உரையாற்றவுள்ளார்.

## பாடசாலைகள் எப்போது ஆரம்பம்? இன்னமும் இறுதி முடிவு இல்லை

### கல்வி அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

பாடசாலைகளை எதிர்வரும் 23ஆம் திகதி மீண்டும் திறப்பது குறித்து இன்னமும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்று அரசு அறிவித்துள்ளது.

கொழும்பில் இன்று காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 9ஆம் திகதி அரச பாடசாலை மாணவர்களின் மூன்றாம் தவணை கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கவிருந்தன. எனினும், நாட்டில் தற்போதுள்ள நிலைமைகளுக்கு அமைய எதிர்வரும் 23ஆம் திகதி பாடசாலைகளைத் திறக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தற்போதுள்ள சூழ்நிலைகளை ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்காகக் கல்விமான்கள், மருத்துவத்துறையினருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். - என்றார்.

### மேன்முறையீட்டு நீதிமன்றம் பரபரப்புத் தீர்ப்பு

# வில்பத்து காடழிப்பு சட்டவிரோதமானது!

### தம் சொந்தச் செலவில் மர மீள்நடுகையை மேற்கொள்ளுமாறு ரிஷாத்துக்கு உத்தரவு

கொழும்பு,நவம்பர்16

வில்பத்து சரணாலயத்தின் கல்லாறு வனப்பகுதியில் மேற்கொள் ளப்பட்ட காடழிப்பு நடவடிக்கை சட்ட விரோதமானது என்று மேன் முறையீட்டு நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது.

காடழிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் மரங்களை முன்னாள் அமைச்சரான நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தமது சொந்த நிதியில் நடவேண்டும் என்றும் மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை அழித்து, சட்ட விரோதக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனக் குற்றஞ்சாட்டி, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக சுற்றுச்சூழல் நீதி மையத்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை அழித்து, கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட் டுள்ளமை சுற்றுச்சூழலுக்குப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் 30 வருட ஆயுத போரைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் அங்கமாகவே மேற்படி வனப்பகுதி அழிக்கப்பட்டு, முஸ்லிம் மக்கள் குடியேற்றப்பட்டமையும், அப்போது மீள்குடியேற்ற அமைச்சராக ரிஷாத் பதியுதீன் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கவை.

## யாழ்ப்பாணத்துக்குப் பெருமை சேர்த்த மகாஜன மாணவி வடக்கில் முதலிடம்!

### அகில இலங்கை ரீதியில் இரண்டாமிடம்; வைத்தியராகுவதே இலக்கு என்கிறார் ஜனுஸ்கா



யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிமாணவிசுபாஸ்கரன்ஜனுஸ்கா 2020ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத் துக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் யாழ். மாவட்டம் மற்றும் வடக்கு மாகாணத்தில் முதலிடத்தையும், தமிழ் மொழி மூலம் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

எதிர்காலத்தில் வைத்தியராகுவதே தனது இலக்கு என்று சாதனை மாணவி ஜனுஸ்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மகாஜனக் கல்லூரி யில் இம்முறை 84 மாணவர்கள் பரீட் சைக்கு தோற்றி இதில் 36 மாணவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வெட்டுப் புள்ளி 160 புள்ளிகள் என்ற நிலையைத் தாண்டி சித்தி பெற்றுள்ளனர். நீண்ட வருடத்தின் பின்பு பாடசாலையில் இவ்வாறு அதிகமான மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர் என்று பாடசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

## அரியாலையில் 62 பேரின் மாதிரிகள் சோதனைக்கு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.16

லண்டனில் இருந்து வந்து அரியாலையில் தங்கி நின்று மீண்டும்லண்டனிற்குப்பயணிக்கச் சென்றவருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டமையை அடுத்து அரியாலையை சேர்ந்த 62 பேருக்கு பி.சி. ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் அடங்கும் அரியாலை கிராமத்திற்கு இரு மாதங்களின் முன்னர் லண்டனில் இருந்து வருகை தந்த ஒருவர் தனிமைப்படுத்தல் நிறைவு செய்து வீடு திரும்பியிருந்தார். இருப்பினும் மீண்டும் நாடு திரும்பும் முயற்சிக்காக ஒக்டோபர் மாதம் கொழும்புக்குச் சென்று வந்தார்.

இவ்வாறு கொழும்பு சென்று மீண்டவர் திரும்பவும் லண்டன் பயணிக்கும் நோக்கில் கடந்த 10 ஆம்திகதியாழில்இருந்துகொழும்பிற்குப் பயணித்து 11 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டதில் அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது..

இதனால் அவருடன் பழகியவர்கள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குள் 12 குடும்பங்கள் உடனடியாக தனிமைப்படுத்தப்பட்டன. இதில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் , ஓர் பெண்சட்டத்தரணிஆகியோரும் உள் அடங்கியிருந்தனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்கள், அயலில் உள்ளவர்களில் இருந்து முதல்கட்டமாக இன்று 62 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இடம் பெறும் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டன. அவர்களில் யாருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று சோதனை அறிக்கை கிடைத்துள்ளது.

# மாவீரர் நாளை நினைவுகூர முடியாது; மீறினால் தனிமைப்படுத்தப்படுவீர்கள்!

### இராணுவத் தளபதி மிரட்டல்

போரில் மரணித்த சாதாரண மக்களை நினைவு கூர்வதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அதனை வீட்டில் இருந்து செய்யலாம். ஆனால், பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டு உயிரிழந்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் மாவீரர் தின நினைவேந்தலைப் பொது வெளியில் நடத்துவதற்கு இடமளிக்க முடியாது. அதை மீறி நடத்தினால் தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு இன்று எச்சரிக்கை விடுத்துள்ளார் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறையில் உள் ளது. மக்கள் ஒன்று கூடுவது தொடர்பில் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி நடைமுறைகளை மீறி ஏனையோரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் பொதுவெளியில் எவராவது செய்யப்பட்டால் அவர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

போரில் மரணித்த சாதாரண மக்களை நினைவுகூர்வதற்கான உரிமை அவர்களின் உறவினர்களுக்கு இருக்கின்றது. அதனை வீட்டில் இருந்து செய்யலாம். ஆனால், பயங்கரவாத அமைப்பில் இருந்து பெரிய அழிவுகளை ஏற்படுத்திவிட்டு உயிரிழந்தவர்களை அதுவும் பொது வெளியில் குழுக்களாக இணைந்து நினைவுகூர்வது ஏற்புடைய நடவடிக்கையாக இருக்காது. உலகில் எந்தவொரு நாடும் இதற்கு அனுமதி வழங்காது.

எனவே, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்குப் புத்துயிர் கொடுக்கும் வகையிலும், அவ்வமைப்புக்குப் பரப்புரை செய்யும் நோக்கிலும் பொதுவெளியில் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படு மானால் - சுகாதாரப் பாதுகாப்புக்கு அச் சுறுத்தல் விடுக்கப்படுமானால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# புதிய அரசமைப்புத் தயாரிக்கும் போது மக்களை முன்னிறுத்தி இருக்கவேண்டும்!

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 17

புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு கட்சிகளுக்குமான அரசியல் அபிலாஷைகளைக் கைவிட்டு, நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய வகையில் நீண்டகால அடிப்படையில் மக்களை முன்னிறுத்தி அதனைத் தயாரிப்பது அவசியமாகும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வலியுறுத்தியிருக்கிறார்.

புதிய அரசமைப்பு தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விசேட ஆணைக்குழுவின் செயலாளருக்கு பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி அனுப்பிவைத்திருக்கும் கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அதில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு -

அண்மைக்காலத்தில் புதிய அரசமைப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. கடந்த 42 வருடகாலத்தில் 20 தடவைகள் திருத்தம் செய்யப்பட்ட அரசமைப்புக்குப் பதிலாக அனைவருக்கும் பொருத்தமானதும் நீண்டகால நோக்கிலானதுமான புதிய அரசமைப்பொன்றைத் தயாரிப்பது அவசியம் என்பதே எமது அபிப்பிராயமாகும்.

அதற்காக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காகத் தற்போதைய அரசாங்கம் விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்தமை வரவேற்கத்தக்கதாகும். எனினும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகின்றோம்.

அதன்படி புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் போது ஒவ்வொரு கட்சிகளுக்குமான அரசியல் அபிலாஷைகளைக் கைவிட்டு, நாட்டில் தற்போது காணப்படும் அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையில் நீண்டகால அடிப்படையில் மக்களை முன்னிறுத்தி அதனைத் தயாரிப்பது அவசியமாகும்.

அதேபோன்று இலங்கை இனரீதியான இளைஞர் எழுச்சியையும் சுமார் மூன்று தசாப்தகால போரை எதிர்கொண்ட நாடாகும். எனவே எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதவாறு, அனைத்து இனங்களின் உரிமைகளையும் உறுதிசெய்யும் வகையில் புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக அடிக்கடி அரசமைப்புத் திருத்தத்தை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தனையைத் தோற்றுவிக்காதவாறு, அனைத்து தரப்பினரதும் வெவ்வேறு அபிப்பிராயங்களையும் விசேட ஆணைக்குழு கருத்திலெடுத்துச் செயற்பட வேண்டும்.

மேலும் தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி நிலையில் மக்களின் ஒட்டுமொத்த அவதானமும் அதிலேயே குவிந்திருக்கிறது. ஆகவே புதிய அரசமைப்புத் தொடர்பில் மக்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகத் தெளிவுபடுத்தல் விழிப்புணர்வூட்டல் செயற்திட்டமொன்றை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்குகின்றோம்.

அத்தோடு ஆலோசனைகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எனினும் தற்போதைய சூழ்நிலையில் அக்காலவரையறை எவ்விதத்திலும் போதுமானதல்ல. ஆகவே மக்கள் தமது ஆலோசனைகளை வழங்குவதற்குப் போதிய கால அளவையும், ஆலோசனைகளைப் பெறுவதற்கான மாவட்ட ரீதியான கட்டமைப்புக்களையும் உருவாக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடக்கம் செய்வது தொடர்பாக இந்த வாரம் இறுதி முடிவாம்!

### சுகாதார அமைச்சர் சொல்கிறார்

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களைப் புதைப்பதற்கு அனுமதி வழங்குவதா அல்லது இல்லையா என்பது தொடர்பாக சுகாதார அமைச்சு இந்த வாரம் உறுதியான தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் இறக்கும் முஸ்லிம்களைப் புதைக்க அனுமதி வழங்கப்பட்டதாக சமீபத்தில் சமூக வலைத்தளங்களில் வெளியான செய்தி பரவலாகப் பேசப்பட்டது.



ஆனால் அரசாங்கத்தை சேர்ந்த சிலர், இந்த விடயத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது எனக் கூறினர். அதேபோன்று அரசாங்கத்தை சேர்ந்த மற்று மொருதரப்பினர் அனுமதி வழங்கப்படவில்லை எனக் கூறியுள்ளனர்.

இந்நிலையிலேயே இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளவை வருமாறு -

கொரோனா மரணங்களைப் புதைப்பது தொடர்பில் அமைச்சரவையில் கருத்து பரிமாறப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப குழுவுடன் கலந்துரையாடி முடிவு எடுக்குமாறு எனக்கு அறிவிக்கப்பட்டது.

எனவே, அதனுடன் தொடர்புள்ள தொழில்நுட்ப குழுவின் சில அறிக்கைகள், எனக்கு கிடைக்க வேண்டியுள்ளது. அந்த பரிந்துரைகள் கிடைத்ததும் இது தொடர்பில் இறுதி முடிவு எடுக்க இருக்கின்றோம். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பில் ஜனாதிபதி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்!



கொழும்பு, நவ. 17

நாட்டில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளின் நாளாந்த நிலைமை தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

இதன்போது சுகாதார அதிகாரிகளிடம் இருந்து சாதகமான சமிக்ஞைகள் கிடைத்ததும் தனிமைப்படுத்தலில் இருந்து சில பகுதிகள் தளர்த்தப்படும் என்றும் அறிய முடிகின்றது.

இதேவேளை தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் கொரோனா தொற்று மேலும் பரவாமல் தடுக்க வீட்டுக்குள்ளேயே தங்குமாறும் இராணுவத் தளபதி பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்தோடு நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் சட்டவிரோத பொதுக் கூட்டங்கள் மற்றும் மக்கள் நடமாட்டங்களைக் கண்காணிக்க ட்ரோன் மூலமான கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்ட 12 பொலிஸ் பிரிவுகளைத் தவிர, இன்று முதல் கோட்டை, புறக்கோட்டை, மருதானை, டாம் வீதி, கொம்பனித் தெரு உள்ளிட்ட பகுதிகளும் தனிமைப்படுத்தப்படவுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதியான நோயாளிகளின் எண்ணிக்கை நேற்று 3 ஆயிரத்து 500 ஐத் தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உடல்களை அடக்கம் செய்யும் முஸ்லிம் உரிமைகளில் அரசியல் செய்யவேண்டாம்!

### பகவந்தலாவ ராகுல ஹிமி தெரிவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்யும் உரிமையைப் பெற்றுக் கொடுங்கள் என பகவந்தலாவ ராகுல ஹிமி தேரர் தெரிவித்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டலின் கீழ் அடக்கம் செய்வதற்கு ஜனாதிபதி ஆவனசெய்ய வேண்டுமெனவும் அவர் வலியுறுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக ராகுல ஹிமி மேலும் கூறியுள்ளவை வருமாறு -

சடலங்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம். இஸ்லாமியர்களின் மனதைக் காயப்படுத்தி, அவர்களை கோபத்துக்குள்ளாக்காதீர்கள். அது எமக்குப் பாவம்.

இஸ்லாமியர் ஒருவர் மரணித்து விட்டால் அவரது உடலை என்ன செய்ய வேண்டும் என அந்த மதத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இப்போது நாட்டில் புதிய கதையொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது - இறந்தவர்களின் உடலை எரிப்பதா? அடக்கம் செய்வதா? என்பதாகும். ஆனால், இறந்தவர்களின் உடலை எரிப்பது பாவமென்று இஸ்லாமிய தர்மம் கூறியுள்ளது. இறந்தவர்களின் உடலுக்கு மரியாதை செய்ய வேண்டும்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இறந்த ஜனாஸாக்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள். கவலையாக இருக்கிறது. இயற்கையும், பிரபஞ்சமும் இதையா எதிர்பார்க்கிறது?



எங்களை விட உயர்ந்த நாடுகளில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்கா, கனடா, இத்தாலி, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் சடலங்கள் எரிக்கப்படவில்லை. சுகாதாரத்துறை என்ன கூறுகிறதோ அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏன் இலங்கை நாட்டில் மாத்திரம் தகனம் செய்து கொண்டிருக்கிறார்கள்?

இந்த நாட்டின் தலைவர்களே இந்த விவகாரம் தொடர்பில் சரியான ஒரு பதிலை இந்நாட்டு மக்களுக்கு வழங்குங்கள். என்ன நடைமுறை என இலங்கை அரசாங்கம் சரியான சட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி மக்களின் மனதை ஆறுதல்படுத்தும் வகையில் வார்த்தையொன்றைக் கூறவேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 24 மணித்தியாலங்களில் கொழும்பில் மாத்திரம் 541 கொரோனா தொற்றாளர்!

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளம் காணப்பட்ட 704 கொரோனா தொற்றாளர்களில் 541 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு நேற்றுக் (திங்கட்கிழமை) காலை கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிலையில், கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளை வைத்திருந்த பலர் தற்பொழுது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இன்று அதிகாலை 5 மணி முதல் தனிமைப்படுத்தல் அமுல்படுத்தப்பட்ட பகுதிகளிலேயே அதிகமானோர் இனங் காணப்பட்டுள்ளனர் எனவும் இராணுவத் தளபதி சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதிக்குப் பின்னர் ஞாயிற்றுக்கிழமை வரையில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 5 ஆயிரத்து 127 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை, திவுலப்பிட்டிய மற்றும் பேலியகொடை கொத்தணிகள் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து, இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கமத்தொழில் பொருளாதார மத்திய நிலையம் பொலன்னறுவையில் அமைக்க நடவடிக்கை!

## சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

பொலன்னறுவை - கல்லேல்ல பிரதேசத்தில் 70 கோடி ரூபா மதிப்புள்ள கமத்தொழில் பொருளாதார மத்திய நிலையமொன்று ஸ்தாபிக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்ட செயலக காரியாலயத்தில் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற வாழ்வாதார அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் வழிநடத்தலில் செயற்படுத்தப்படும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்துக்கு ஏற்ப இந்த வாழ்வாதார அபிவிருத்தி குழு கூட்டம் இடம்பெற்றது.

பொலன்னறுவையை சுற்றுலா தளமாக அபிவிருத்தி செய்வதற்காக இதுவரை கலாசார அமைச்சு, தொல்பொருள் திணைக்களம் மற்றும் மத்திய கலாசார நிதியத்துடன் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை இணைந்து இதுவரை வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இதற்கு மேலதிகமாக சுற்றுலா ஹோட்டல் பாடசாலையொன்றை பொலன்னறுவை மாவட்டத்தில் அடுத்த ஆண்டுக்குள் ஆரம்பிப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு மேலதிகமாக பொலன்னறுவை மாவட்டத்தில் வனஜீவராசிகள் வலயத்தை அண்மித்த பகுதியில் சூழலுக்கு பாதுகாப்பான சுற்றுலா திட்டங்களை செயற்படுத்துவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய பொலன்னறுவை மாவட்டத்தில் நீர்ப்பாசன சுற்றுலா திட்டத்தை மேம்படுத்துவதற்கும் மாதுறுஓய, சோமாவதி மற்றும் வாஸ்கமுவ ஆகிய வனப்பகுதிகளை அண்மித்து சுற்றாடல் பாதுகாப்பான திட்டங்களை எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டம் ஜனவரி முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இந்த ஓய்வூதிய திட்டம் 2010 இல் நிறுத்தப்பட்டது. மேலும், 2014 முதல் இடைநீக்கம் செய்யப்பட்ட வாழ்க்கைத் துணைவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் நெல் சாகுபடியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

துணை உணவுப் பயிர்கள், காய்கறிகள் மற்றும் பழங்களுக்கான காப்பீட்டுத் திட்டமொன்றை அறிமுக்கப்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

பொலன்னறுவை கல்லேல்ல பிரதேசத்தில் கமத்தொழில் பொருளாதார மத்திய நிலையமொன்று ஸ்தாபிக்கப்படும். அதற்காக செலவாகும் நிதி 70 கோடி ரூபாவாகும். அடுத்த ஆண்டு பொலன்னறுவை மாவட்டத்தில் நெல் கொள்வனவை முறைப்படுத்துவது தொடர்பாக நீண்ட விவாதம் நடைபெற்றது. அடுத்த ஆண்டுக்குள் 3 லட்சம் மெட்ரிக் தொன் நெல்லை கொள்வனவு செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

உர மானியம் பெறும் விவசாயிகளிடமிருந்து ஒரு ஹெக்டேயருக்கு 1000 கிலோ நெல் கொள்வனது செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் நெல்லை விற்பனை செய்யாத விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கக்கூடாது என்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அடுத்த ஆண்டு முதல் உரம் மற்றும் மரக்கறிகளை ரயில் மூலம் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் ரயில்வே திணைக்களத்துடன் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்று இது வரை தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கமத் தொழில் அமைச்சர் குறிப்பிட்டார்.

பொலன்னறுவை மாவட்டத்தில் காட்டு யானைகளின் பிரச்சினைகளைக் குறைப்பது தொடர்பிலும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது. அதற்கான ஒதுக்கீடுகளை பெற்றுக் கொடுப்பதற்கு கமத்தொழில் அமைச்சால் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர்களான றொஜுன் ரணசிங்க, ஜஹான் சேமசிங்க, டீ.பீ.ஹேரத் மொஹான் டி சில்வா, விமலவீர திசாநாயக்க, சிறிபால கம்லத், மாவட்ட செயலாளர் டபிள்யூ.ஏ.தர்மசிறி, வட.மத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், அனைத்து பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# துணை மருத்துவ சேவை வெற்றிடங்களை மாகாண ரீதியில் நிரப்புவதற்கு நடவழக்கை

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.17

வடக்கு மாகாணத்தில் பெருமளவு வெற்றிடங்கள் காணப்படும் துணை மருத்துவ சேவைகளுக்கு சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அவற்றுக்கு மாகாண இளையோர்கள் விண்ணப்பிப்பதன் ஊடாக பயிற்சியின் பின் வேலைவாய்ப்பு கிடைக்கும்

- இவ்வாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

சுகாதார அமைச்சினால் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்த ஒன்பது பதவி நிலைகளுக்கும் ( பாடசாலை பற்சிகிச்சையாளர், சுகாதார பூச்சியியல் அலுவலர், கண் தொழிலநுட்பவியலா ளர், செயற்கை அவயவ தொழில்நுட்ப வியலாளர், பொது சுகாதார பரிசோதகர், இதயத் துடிப்பு பதிவாளர், மூளை மின் இயக்கப் பதிவாளர், பொது சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், பல் தொழில்நுட்பவியலாளர்), நிறைவுகாண் மருத்துவ சேவையைச் சேர்ந்த மூன்று பதவி நிலைகளுக்கும் (மருந்தாளர், தொழில் சார் சிகிச்சையாளர், கதிரியலாளர்) ஆள் சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பதவிகளுக்கு விண்ணப்ப முடிவுத் திகதி நவம்பர் 30, 2020 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்களை **www.health.gov.lk** என்ற சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணை யத்தளத்திலும் பார்வையிடலாம்.

ஆள்சேர்ப்பிற்காக 2017/2018 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்கள் விண்ணப்பிக்க முடியும். இவர் கள் சுகாதார அமைச்சின் உத்தியோ கபூர்வ இணையத்தளத்தின் **www.health.gov.lk** ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இணையம் மூலமாக விண்ணப்பிப்பதற்கு உதவுவதற்காக வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்பதற்கு உதவி தேவையானவர்கள் அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை தேவையான ஆவணங்களுடன் செல்வதன் மூலம் விண்ணப்பிக்க முடியும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் ஒன்றரை தொடக்கம் இரண்டு வருடங்களிற்கு அவர்கள் தெரிவு செய்யப்பட்ட துறைக ளுக்குரிய பயிற்சி நெறிகளுக்கு உள் வாங்கப்படுவர். பயிற்சி ஆரம்பிக்கும் காலத்திலிருந்து அனைவருக்கும் கொடுப்பனவாக கணிசமான தொகை வழுங்கப்படும்.

பயிற்சியின் நிறைவின் போது சித்தியடையும் அனைவருக்கும் நியமனம் வழங்கப்படும். மிக முக்கியமாக ஆள் சேர்ப்பின் போது மாகாண மற்றும் மாவட்ட கோட்டாக்கள்(ஒதுக்கீடுகள்) ஒதுக்கப்பட்டுள்ளன. அதனால் வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கான வாய்ப்புகள் அதிகம்.

அத்துடன் வடமாகாணத்தில் இந்த மருத்துவ சேவைகள் சார்ந்த பதவி நிலைகளுக்கு பெருமளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே தகுதி வாய்ந்த அனைவரும் உடனடியாக விண்ணப்பிப்பதன் மூலம் அரசாங்க வேலை வாய்பினையும் மக்களுக்கு சேவையாற்றும் சந்தர்ப்பத்தினையும் பெற்றுக்கொள்ளலாம் - என்றுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் விவரம் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் நிலவும் பல வெற்றிடங்கள் மத்திய சுகாதார அமைச்சினால் நிரப்பப்பட வேண்டியவையாக காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்களை ஒத்த பதவி வெற்றிடங்கள் ஏனைய மாகாணங்களிலும் உள்ளன. அனைத்தையும் நிரப்பும் நோக்கில் தற்போது விண்ணப்பங்கள் போரப்பட்டுள்ளன.

இவ்வாறு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதில் இம்முறை ஒரு விசேட அம்சம் காணப்படுகின்றது. அதாவது விண்ணப்பங்கள் மாகாண ரீதியில் கோரப்பட்டுள்ளது. அதனால் மாகாணத் தில் காணப்படும் வெற்றிடங்களிற்கு மாகாணத்தைச் சேர்ந்தோரே நியமிக்கப்படுவர்.

இவ்வாறு உள்ள12 வகையான வெற்றிடங்களிற்கும் தெரிவு செய்யப்படுவோர் பயிற்சியின் பின்னர் பணிக்கு அமர்த்தப்படவுள்ளமையினால் கணிதம் , விஞ்ஞானம் கற்ற மாணவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த முடியும். - என்றார்.

# மன்னார் கல்வி வலயப் பாடசாலைகளில் 144 மாணவர்கள் புலமைப்பரிசிலில் சித்தி!

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி பாடசாலை இம்முறை இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துள்ளது.

வெளியாகியுள்ள தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் மன்னார் கல்வி வலயத்தில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி செல்வி றொசான்னா சைலின் ரவீந்திரன் 195 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தையும், செல்வி நா.யோலின் அப்ரியானா குபேர குமார் 194 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

குறித்த பாடசாலையில் 34 மாணவிகள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தியை பெற்றுள்ளனர்.

மேலும் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் செல்வன் சதீஸ்வரன் பிரியகன் 194 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

மேலும் மன்னார் கோட்டத்தில் 110 மாணவர்களும், நானாட்டான் கோட்டத்தில் 28 மாணவர்களும், முசலி கோட்டத்தில் 6 மாணவர்களும், மொத்தமாக மன்னார் கல்வி வலயத்தில் 144 மாணவர்கள் இம்முறை இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர் என மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.


இதன் போது மாவட்ட ரீதியாக 195 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தை பெற்ற மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி செல்வி றொசான்னா சைலின் ரவீந்திரன் தெரிவிக்கையில் -

நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மாணவர்கள் அனைவரும் கற்றல் நடவடிக்கைகளில் பாதிப்படைந்து இருந்தனர். ஆனால் பாடசாலை ஆசிரியர், அதிபர், பெற்றோர் ஆகியோரின் முயற்சியால் நான் சித்தியடையச் சந்தர்ப்பம் கிட்டியது.

அவர்களுக்கு முதலில் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். எனது எதிர்கால இட்சியம் வைத்தியராக வந்து எமது மக்களுக்கு சேவை செய்வதே என அவர் தெரிவித்தார்.

# கட்டுக்குள் மினுவாங்கொடைக் கொத்தணி இராணுவத் தளபதி சவேந்திரசில்வா உறுதி!

நாட்டில் இரண்டாவது கொரோனா அலையாக உருவெடுத்த மினுவாங்கொடை கொரோனா கொத்தணியை தற்போதைய நிலையில் முழுமையாக கட்டுப்படுத்த முடிந்துள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரால் சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

மினுவாங்கொடையில் ஆரம்பமான கொரோனா கொத்தணியில் சுமார் 3 ஆயிரத்து 106 தொற்றாளர்கள் வரை இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், அதில் 136 பேர் தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

பெரும் சிரமத்திற்கு மத்தியிலேயே குறித்த கொரோனா கொத்தணியைக் கட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா. அனுசரணை நாடுகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம்

## கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் தெரிவிப்பு



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட இரண்டு வருட கால அவகாசம் எதிர்வரும் மார்ச் மாதத்தில் முடிவுக்கு வரவுள்ள நிலையில், தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிய நாடுகளின் தூதுவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களை ஆரம்பித்திருக்கின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கனடா, ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவற்றின் தூதுவர்களுடன் இது தொடர்பாக ஏற்கனவே பேச்சுகள் இடம்பெற்றிருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடாக அமெரிக்கா தற்போது இல்லாத போதிலும், அதில் எடுக்கப்படக் கூடிய தீர்மானங்களில் செல்வாக்கைச் செலுத்தக் கூடிய ஒரு நாடாக இருப்பதால், அமெரிக்காவுடனும் பேசியிருக்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

இந்தப் பேச்சுகள் அடுத்த வாரத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், இலங்கை தொடர்பில் பிரதான அனுசரணை நாடுகள் எவ்வாறான அணுகுமுறையை முன்னெடுக்கப் போகின்றன என்பதையிட்டு குறிப்பிட்ட தூதுவர்கள் தமது நாட்டு அரசுகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் கூட்டமைப்புடன் மீண்டும் பேசுவார்கள் எனவும் தெரிவித்தார்.

பெரும்பாலும் அடுத்த வாரம் இந்தப் பேச்சுக்கள் இடம்பெறும் என எதிர்பார்த்திருப்பதாகவும் சுமந்திரன் குறிப்பிட்டார்.

அனுசரணை நாடுகளின் கருத்துக்களை அறிந்த பின்னரே இவ்விடயத்தில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பதையிட்டு தீர்மானிக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் மார்ச் முடிவுக்கு வருவதால், மற்றொரு தீர்மானத்தைக் கொண்டுவருவதா அல்லது இதனை வேறு வகையில் கையாள்வதா என்பதையிட்டு, பிரதான அனுசரணை நாடுகள் ஆலோசனை நடத்தி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் முக்கியமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே அனுசரணை நாடுகளுடன் கூட்டமைப்பு பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

### புதிய அரசமைப்பு யோசனை

இதேவேளையில், புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கும் அரசு அதற்கான யோசனைகளைக் கோரியிருப்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமது யோசனைகளை முன்வைக்க இருக்கின்றது எனவும் சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

இதற்கான ஆவணம் ஒன்றைத் தயாரிக்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட அரசமைப்பு குறித்த தீர்மானத்தின் அடிப்படையில் தமது அரசமைப்பு யோசனைகள் அமைந்திருக்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

புதிய அரசமைப்புக்கான யோசனைகளை இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறு முன்னர் கோரப்பட்டிருந்த போதிலும், தற்போதைய நிலைமைகளைக் கருத்தில்கொண்டு இந்தக் கால அவகாசம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பேலியகொடையில் புதிய மெனிங்சந்தை நடவடிக்கை வெள்ளிக்கிழமை ஆரம்பம்

கொழும்பு, நவ. 17

பேலியகொடை புதிய மெனிங் சந்தையின் நடவடிக்கைகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மெனிங் சந்தைக்கு அண்மித்த பகுதிகளில் கெரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் புறக்கோட்டை மெனிங் சந்தையை பேலியகொடவுக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

பேலியகொட பகுதியில் புதிய மெனிங் சந்தையை உருவாக்குவதற்கான கட்டுமான நடவடிக்கைகள் கடந்த 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் பணிகள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ள சந்தையின் அனைத்து பிரிவுகளிலும் குறிப்பிட்டளவு வர்த்தகர்களை மாத்திரம் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினரின் பரிந்துரைக்கமைய, ஏனைய வர்த்தகர்களை சந்தைக்குள் அனுமதிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் என்.கே.ரணவீர தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழலுக்கு நட்புறவான வாகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தச் சந்தை வளாகம், முழுமையாக இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் கொரோனா தொற்றின் அச்சம் காரணமாக பணி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது. இந்த வளாகத்துக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றலை வழங்கக்கூடிய சூரிய மின்கலங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த வளாகம் ஐந்து தொகுதிகளை உள்ளடக்கியுள்ளதுடன் ஒரு வளைவு மற்றும் உயர்த்தப்பட்ட பாதை வசதிகளையும் கொண்டுள்ளது. இரண்டு தொகுதிகளுக்கும் இடையில் பாலம் இணைப்பு வசதிகளையும் உள்ளடக்கியுள்ளதுடன் கட்டுமாணப்பணிகள் நிறைவடைந்தவுடன் முழு சந்தை வளாகமும் 446,734 சதுர அடி (25 ஏக்கர்) பரப்பளவைக் கொண்டிருக்கும்.

புதிய வளாகம் 1200 இற்கும் மேற்பட்ட கடைகளைக் கொண்டிருப்பதுடன் மேலும் விற்பனையாளர்களுக்கு விசாலமான, தூய்மையான வளாகங்கள், சேமிப்பு, வாகன நிறுத்துமிடம் மற்றும் கழிவு முகாமைத்துவத்துக்கு சிறந்த வசதிகளை வழங்கும் வகையில் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# பற்றிக் டிரஞ்சனுக்கு மேலதிகமாக பிரதிப் பிரதம செயலாளர் பதவியும்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.17

வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – ஆளணியும் பயிற்சியுமாக தற்போதைய உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன் நேற்று முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு பிரதிப் பிரதம செலாளர் ஆளணியும் பயிற்சியுமாக பதவி வகித்த டீ மெல் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளராக நேற்று முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதனை அடுத்து பற்றிக் டிறஞ்சன் வடக்கு பிரதிப் பிரதம செயலாளர் ஆளணியும் பயிற்சியுமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

உள்ளூராட்சி ஆணையாளராக வகிக்கும் பதவிக்கு மேலதிகமாக இப்பதவியினையும் பதில் கடமையாற்றும் வகையில் மாகாண ஆளுநரால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலம் நிர்வாக சேவையில் அனுபவம் கொண்ட பற்றிக் டிறஞ்சன் ஏற்கனவே மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகவும் இரண்டு ஆண்டுகள் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கில் தோற்றிய 18,158 மாணவரில் 3,167 பேர் புலமைப் பரிசிலில் சித்தி!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.17

வடக்கு மாகாணத்தில் இருந்து 18 ஆயிரத்து 158 மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில் 3 ஆயிரத்து 167 மாணவர்கள் வெட்டுப் புள்ளியை தாண்டியுள்ளனர் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஒக்டோபர் 30 ஆம் திகதி இடம்பெற்று நேற்று முன்தினம் அதன் பெறுபேறு வந்தமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களில் 16.3 வீத மாணவர்கள் வெட்டுப் புள்ளியை தாண்டியபோதும் இந்த ஆண்டு 17.4 வீதமான மாணவர்கள் வெட்டுப் புள்ளியைத் தாண்டியுள்ளனர்.

இதேநேரம் 100 புள்ளிகளிற்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் 70 புள்ளிகளிற்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் வீதமும் அதிகரித்தே காணப்படுகின்றது.

இவ்வாறு அதிகரித்துள்ளதன் அடிப்படையில் மாகாணத்தில் தரத்திலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளமை தொடர்பில் அடுத்த வாரம் கல்வி அமைச்சின் தரவின் மூலமே உறுதி செய்ய முடியும். - என்றார்.

# கார் விற்பனை நிலையத்துக்குள் மோதி நுழைந்த சொகுசுக் கார்!



கொழும்பு தாமரைத் தடாகத்திற்கு அருகிலுள்ள சொகுசு கார் விற்பனை நிலையம் ஒன்றின் மீது, சொகுசு வாகனமொன்றுமோதுண்டு விபத்துக்குள்ளாகி உள்ளது.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். வேகக் கட்டுப்பாட்டை இழந்த இந்த சொகுசு வாகனம், கார் விற்பனை நிலையத்தின் கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பெறுமதியான சொகுசு கார் ஒன்றுக்கும், வாகன விற்பனை நிலையத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்தச்சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கறுவாத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வட்டு. பொலிஸாரின் செயற்றிறனின்மை ஜனாதிபதியிடம் முறையிடுவதற்கு முடிவு

## வலி.மேற்கு பிரதேச சபையில் தீர்மானம்

வட்டுக்கோட்டை,நவ.17

வலி.மேற்கு பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதில் வட்டுக்கோட்டை பொலிஸார் அசமந்தப் போக்கை கடைப்பிடிப்பது தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டுசெல்வது என வலி. மேற்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சுழிபுரத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இரட்டைப் படுகொலையை தடுத்து நிறுத்த முடியுமாக இருந்த போதிலும் பொலிஸார் உரிய நேரத்தில் குறிப்பிட்ட இடத்திற்கு செல்லாத காரணத்தாலேயே இந்தக் கொலை நடைபெற்றுள்ளது எனவும் சபையில் தெரிவிக்கப்பட்டது. பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டுக்கு சபையில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபையின் 33 ஆவது அமர்வு தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது சுழிபுரம் - குடாக்கனையில் இடம்பெற்றஇரட்டைப்படுகொலைதொடர்பாகஉறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். இப்பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாலேயே அடிக்கடி இவ்வாறான படுகொலைகள் இங்கு நடைபெறுகின்றன என உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

கசிப்புஉற்பத்திசெய்பவர்களுக்கும்வட்டுக்கோட்டை பொலிஸாருக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன எனவும் இதனாலேயே இங்கு கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேற்படிபிரதேசத்தில்கசிப்புஉற்பத்திசெய்பவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கடந்த வருடம் கையளிக்கப்பட்டது எனவும் அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் சபையில் கருத்து முன்வைக்கப்பட்டது.

கடந்த வெள்ளி நள்ளிரவு மேற்படி படுகொலை நடைபெற்ற இடத்தில் மாலை வேளையே ஒருவர் தாக்கப்பட்டார்.

பின்னர் இரவு 10 மணியளவில் கொலையாளிகள் வாள்களுடன் நிற்கின்றனர் என்ற விடயம் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தொலைபேசியில் பல தடவைகள் அறிவிக்கப்பட்டது. எனினும் அவர்கள் அங்கு செல்லவில்லை.

கொலை இடம்பெற்ற பின்னர் இராணுவத்தினர் அங்கு சென்று உடல்களை தமது வாகனத்தில் ஏற்றிச் சென்ற பின்னரே பொலிஸார் சென்றனர். எனவே, குறித்த படுகொலைக்கு பொலிஸாரும் உடந்தையாக இருந்தனரா என்ற கேள்வி எழுகின்றது எனவும் சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சுழிபுரத்தில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்தி அப்பகுதியிலும் அயல் பிரதேசங்களிலும் வசிக்கும் பொதுமக்களைப் பாதுகாக்குமாறும் வட்டுக்கோட்டை பொலிஸாரின் செயற்றிறன் அற்ற தன்மை குறித்தும் உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவருவது என சபையில் ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

கவனயீர்ப்பு போராட்டம்

இதேவேளை, மேற்படி இரட்டைப் படுகொலை, குடாக்கனை கசிப்பு உற்பத்தி, பொலிஸாரின் நடவடிக்கைகள் போன்றவற்றைக் கண்டித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் சந்தியில் அமைதியான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்துவது எனவும் சபையில் தீர்மானிக்கப்பட்டது.

## பஸ், ரயில் சேவைகள் வழமைக்கு!

வார இறுதியில் நிறுத்திவைக்கப்பட்ட பஸ் மற்றும் ரயில் சேவைகள் நேற்றுக் காலை முதல் வழமைபோல் இயங்கத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை மற்றும் மாலை நேர ரயில் சேவைகள் வழமைபோன்று நடை பெறும் என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. எனினும் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை தவிர தனி மைப்படுத்தப்பட்டுள்ள பிற இடங்களிலுள்ள ரயில் நிலையங்களில் ரயில்கள் நிற்காதென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் பஸ்களும் நிறுத்தப்படமாட்டாது என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.




## முல்லை மாவீரர் துயிலுமில்லத்தில் படையினரும், பொலிஸாரும் குவிப்பு!



முல்லைத்தீவு மாவட்டத்தின் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்ல வளாகம் சிரமதான பணிமூலம் துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில் வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்ல வளாகத்தை சூழ படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் மக்கள் ஆகியோர் இணைந்து இந்த துப்புரவு பணியை முன்னெடுத்தனர்.

இதன் போது வன்னிவிளாங்குளம் வீதி முழுவதும் பொலிஸார் மற்றும் படையினர் குவிக்கப்பட்டுள்ளமையுடன் வீதியால் செல்பவர்களை விசாரிக்கும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

காலை முதல் நண்பகல் ஒரு மணிவரை நடைபெற்ற சிரமதானப் பணியின் போது சுகாதார விதிமுறைகளை பின்பற்றி சிரமதானத்தில் ஈடுபட்டாலும் சிரமதானம் முடியும் வரை வீதியில் படையினர், பொலிஸார் ஒளிப்படம் எடுத்து சிரமதான பணியில் ஈடுபட்டவர்களை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

## போலிச் செய்திகளை பரப்பிய இளைஞன் ஞாயிறு கைது!

கொரோனா வைரஸ் காரணமாக இலங்கையின் வீதிகளில் பலர் உயிரிழந்து கிடந்தனர் என சமூக ஊடகங்களில் போலியான செய்திகளை வெளியிட்ட குற்றச்சாட்டுக்காக இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

28 வயதான மேற்படி நபர் நேற்று முன்தினம் ஹந்தனை பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், நேற்று அவர் கண்டி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

முன்னாதாக இவ்வாறு போலிச் செய்தியை பரப்பிய குற்றச்சாட்டின் கீழ் கடுகண்ணாவை பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை சமூக ஊடகங்களில் போலிச் செய்திகளை பரப்பும் நபர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும், அந்தக் குற்றச்சாட்டின் கீழ் மேலும் மூன்று சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.








கந்தசஷ்டி உற்சவத்தின் இரண்டாம் நாளான நேற்று நல்லூர் கந்தசுவாமி கோவிலில் மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது

**படங்கள் : ஐ. சிவசாந்தன்**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

## கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
## இயற்கைக்கான தருணம்

# வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**விளம்பர அனுசரணை:-** காலைக்கதிர் Kalaikkathir